மலர்-3 இதழ்-69 ஜூலை 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## ஹிந்து என்ற பெயரை கொள்ளைக்கார வெள்ளையன் வைத்தானா?

# 14,600 நாட்கள் தண்ணீரில்

# 48 நாட்கள் பக்தர் மனதில்

# அத்திவரதர் சிறப்புகள்

# கலசத்தின் அர்த்தங்கள்

கலசம் (சொம்பு) ...................................சரீரம்
கலசத்தின் மேல்
சுற்றியிருக்கும் நூல்.......................நாடி, நரம்பு
கலசத்தின் உள் இருக்கும்
தீர்த்தம் (நீர்).......................................இரத்தம்
கலசத்தின் மேல் உள்ள தேங்காய்...........தலை
கலசத்தின் மேல் உள்ள
தேங்காயை சுற்றியுள்ள மாவிலை ........ சுவாசம்
கலசத்தின் அடியில்
இருக்கும் அரிசி, இலை ................ மூலாதாரம்
கூர்ச்சம் ................................ ப்ராணம் (மூச்சு)
உபசாரம் ..................................பஞ்சபூதங்கள்





❖ தனது வீட்டில் கோலம் போடாமலும் விளக்கேற்றாமலும் ஆலயங்களுக்கு செல்லக்கூடாது.

❖ எரியும் விளக்கில் எண்ணெய் அல்லது நெய்யை கையால் தொடுவதும் அதன் பிறகு அதைத் தன் தலையில் தடவிக் கொள்வதும் கூடாது.

❖ அடியார்கள் மற்றும் சிவ தீட்சை பெற்றவர்கள் தவிர மற்றவர் தண்ணீரில் திருநீற்றை குழைத்து புசிகொள்ள கூடாது.

❖ கோவில்களில் சூடம் மற்றும் தீபத்தை கைகளில் ஏற்றி காண்பிக்க கூடாது.

❖ நிவேதனம் செய்த தேங்காயை சமையலில் சேர்த்து அந்த உணவை மறுபடியும் சாமிக்கு நிவேதனம் செய்யக்கூடாது.



## தமிழ் மாதங்களில் செய்ய வேண்டிய தான தர்மம்

| | | |
|---|---|---|
| சித்திரை | – | நீர்மோர், விசிறி, செருப்பு, குடை, தயிர் சாதம், பலகாரம் |
| வைகாசி | – | பானகம், ஈயப்பாத்திரம், வெல்லம் |
| ஆனி | – | தேன் |
| ஆடி | – | வெண்ணெய் |
| ஆவணி | – | தயிர் |
| புரட்டாசி | – | சர்க்கரை |
| ஐப்பசி | – | உணவு, ஆடை |
| கார்த்திகை | – | பால், விளக்கு |
| மார்கழி | – | பொங்கல் |
| தை | – | தயிர் |
| மாசி | – | நெய் |
| பங்குனி | – | தேங்காய் |




# இறை வழிபாட்டில் தேங்காய் பழம் எதற்கு

எல்லா தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப்பழம் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும். ஆனால், வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது.

'எனது இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு!" என வேண்டவே நாம் நமது கடவுளுக்கு வாழைப் பழத்தை படைக்கிறோம்.

அதுபோல் தேங்காய்க்கும் அந்த குணம் உண்டு.

அது மட்டுமல்ல தேங்காய், வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை. மாம்பழத்தை நாம் சாப்பிட்டுவிட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட்டைப் போட்டால் அது முளைக்காது. முழுத் தேங்காயிலிருந்து தான் தென்னைமரம் முளைக்கும்.

அது போல, வாழை மரத்திலிருந்து தான் வாழைக்கன்று வரும். பழம் கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள்.





# ஆரத்தியின் வழிமுறை

கற்பூர ஆரத்தி இறைவனுக்கு காட்டும் போது காண்பிக்கும்போது,

கடவுளின் காலிற்கு நான்கு தடவை சுத்தி காண்பிக்கவேண்டும்.

தொப்பிளுக்கு இரண்டு தடவை காண்பிக்கவேண்டும்

முகத்துக்கு ஒரு தடவை

கடைசியாக, முழு உருவத்துக்கும் மூன்று தடவை காண்பிக்க வேண்டும்.



# உடலுக்கு பயனுள்ள சித்த மருத்துவ குறிப்பு



- ❖ மிளகையும் வெல்லத்தையும் வெறும் வயிற்றில் உட்கொண்டால் இருமல் நீர்க்கோவை ஆகியவை குணமாகும்
- ❖ சீரகத்தையும் கற்கண்டையும் மென்று தின்றால் இருமல் குணமாகும்.நான்கு மிளகையும், இரு கிராம்பையும் நெய்யில் வறுத்து பொடி செய்து ஒரு வெற்றிலையில் மடித்து மென்று விழுங்கினால் இருமல் குணமாகும்
- ❖ நான்கு வால் மிளகைச் சிறிதளவு புழுங்கலரிசியுடன் வாயில் போட்டு மென்று அதன் ரசத்தை பருகினால் இருமல் குணமாகும்
- ❖ தூய்மையான அருகம்புல்லை எடுத்து நன்றாக மென்று பற்களில் வலியுள்ள பகுதியில் ஒதுக்கினால் பல்வலி உடனே குணமாகும்.
- ❖ பல் துலக்கி பின் தேனை ஈறு முழுவதும் தடவவேண்டும். சிறிது நேரம் கழித்து வாயைக்கொப்பளித்தால் பற்களில் உள்ள கிருமிகள் அழியும்
- ❖ தேங்காய் எண்ணெயை நாள்தோறும் பல முறை உதட்டில் தடவினால் உதடு வெடிப்பு உதட்டு புண், தோல் உரிதல் ஆகியன குணமாகும்.
- ❖ அரிசியையும் திப்பிலியையும் சிறிதளவு எடுத்து தேனில் பத்து நாட்கள் ஊறவைத்து தினம் ஒரு திப்பிலியை வாயில் போட்டு அடக்கிக்கொண்டால் ஞாபக சக்தி அதிகரிக்கும்
- ❖ மழைக்காலத்தில் ஒரு தம்ளர் பாலில் சிறிதளவு சுக்கு பொடி கலந்து இரவு குடித்து வந்தால் காலையில் புத்துணர்வு பெறலாம்.
- ❖ தலை சுற்றலுடன் வாந்தி ஏற்பட்டால் வெங்காயத்தினை சாறெடுத்து அதனுடன் தேன் கலந்து சாப்பிடலாம்.துளசி இலைச்சாறு, 150 மிலி கற்கண்டு இவை இரண்டையும் கலந்து சர்ப்பத்தாகக் காய்ச்ச வேண்டும். அதில் வேளைக்கு ஒரு டீஸ்பூன் அளவு தினசரி இருவேளை உட்கொண்ட பின் பசும் பால் அருந்தலாம். இந்த சர்பத் சர்வ ரோக நிவாரணியாகும். மூளை, நரம்பு, இதயம், இரைப்பை ஆகியவற்றைப் பலப் படுத்தும்.
- ❖ துளசி இலையை நன்றாக வெயிலில் காய வைத்து பொடி செய்து டீத்தூளில் சேர்த்து டீ தயாரித்து குடித்துவந்தால் நன்கு பசி எடுக்கும்.
- ❖ குளிர்காலத்தில்ஏற்படக்கூடிய சளி, கபம் நீங்கும். அரிசி பொரியைத் தண்ணீரில் வேகவைத்து சாப்பிட்டால் ரத்த கொதிப்பினால் வரக்கூடிய தலை சுற்றல் குணமாகும்
- ❖ ஞாபகசக்தியை அதிகரிக்கும். கண்களில் நீர்வடியும் பிரச்சனை உள்ளவர்கள் தினந்தோறும் வெறும் வயிற்றில் சில பாதாம் பருப்புகளை மென்று தின்றால் நீர் வடிதல் குணமாகும்.
- ❖ தூய்மையான தாய்ப்பாலில் இருதுளியைக் கண்களில் விட்டால் கண் சூடு, கண் எரிச்சல் ஆகியன குணமாகும்.
- ❖ மாதுளை இளைச்சாற்றில் சில துளிகளை மூக்கில் விட்டால் மூக்கில் இருந்து ரத்தம் வடிவது நிற்கும்.
- ❖ சித்தரத்தையைச் சிறிதளவு எடுத்துப் பொடித்து, பசும்பாலில் கலந்து உட்கொண்டால் தும்மல், மூக்கில் நீர்வடிதல் குணமாகும்.
- ❖ பூண்டுத் தோல், மிளகு, ஓமம், ஆகியவற்றை இடித்து நெருப்பு அனலில் இட்டுப்புகையைப்பிடித்தால் மூக்கடைப்பு மூக்கில் நீர்வடிதல் முதலிய நோய்கள் குணமாகும்.
- ❖ எலுமிச்சை பழத்தை பிழிந்து சாறு எடுத்து அதை சூடு படுத்தி சிறிது தேன் கலந்து நாள் ஒன்றுக்கு 3வேளை வீதம் உள்ளங்கையில் விட்டு உட்கொள்ள வேண்டும். இதனால் தொண்டைவலி தொண்டை தொடர்பான நோய்கள்குணமாகும்


ஆன்மிகமலர் மெயில் புக்

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# அனுமன் பட்ட துன்பத்தில் நம் துன்பத்தை கரைக்கும் சுந்தரகாண்டம்

ஆன்மிகத்தில் பல்வேறு புராணக்கதைகளை படித்தால் உடனே நன்மை நடந்து விடும் என்பதை மட்டும் நம்பி, எந்த வித மனத் தெளிவும் இல்லாமல், குருட்டாம்போக்கில் படித்துக் கொண் டிருந்தால், எந்த வித நன்மையும் விளையாது.

முதலில் எந்த ஒரு விஷயத்தை நாம் பின் பற்றுகிறோமே அந்த விஷயத்தின் சாராம்சத்தை அறிந்து கொள்ளவேண்டும்.

அந்தவகையில்தான் சுந்தரகாண்டம் படித் தால் எந்தவித துன்பமும் அன்டாது என்று நம் முன்னோர் கூறினர்.

சுந்தர காண்டம் படிப்பது, நாம் முயற்சி செய்ய ஒரு தூண்டுகோலாக இருக்கும். (Motivation ).

சும்மா உட்கார்ந்து கொண்டு "ஐயோ எனக்கு துன்பம் வந்து விட்டதே, என்ன செய்வேன்" என்று உறைந்து போய் விடாமல், முயன்று துன்பங்களைப் போக்க சுந்தர காண்டத்தில் அனுமன் பட்ட கஷ்டங்களை பார், படி, என்று முன்னோர் தெளிவாக கூறினர்.

சுந்தரகாண்டத்தை பார்க்கும் போதும் படிக்கும் போதும், அனுமன் பட்ட துன்பத்தில், நமது துன்பம் ஒன்றுமில்லை. என்று தெரியவரும்.

சீதையைத் அனுமன் தேடிப் போகிறான். முன் பின் தெரியாத ஊர்.

இராவணன் பெரிய அரக்கன். மாயாவி. எங்கே சீதையை மறைத்து வைத்திருப்பான் என்று தெரியாது.

அந்த ஊரில் யாரிடமாவது போய் கேட்க முடியுமா? தானே கண்டு பிடிக்க வேண்டும்.

அது மட்டும் அல்ல, நடுவில் பெரிய கடல், பெரிய தடை.

தனி ஆளாகப் போகிறான். ஒரு துணையும் கிடையாது. வழி தெரியாது. ஊர் தெரியாது. பயங்கரமான எதிரி.

கிட்டத்தட்ட ஒவ்வொரு மனிதரும் அவர் வாழ் வில் படும் அனைத்து துன்பங்களுக்கும் ஈடானது, நம் நிலை மாதிரியே இருக்கிறது அல்லவா.

கவலையில், துன்பத்தில் இருக்கும் எல்லோ ருக்கும் நிலை இதுதான்.

என்ன செய்ய வேண்டும் தெரியாது. எப்படி செய்ய வேண்டும் என்று தெரியாது. ஆயிரம் தடைகள் வேறு.

அனுமன் என்ன செய்தான் என்று ஒரு உதாரணம் தருகிறது இராமாயணம். அதில் இருந்து நம்பிக்கையும், உற்சாகமும் பெற.

அனுமன் பலசாலி, அறிவாளி... நாம் அப்படி இல்லையே என்று நீங்கள் நினைக்கலாம்.

அவன் சமாளிக்க வேண்டிய சவால்களும் அப்படித்தானே. அனுமனுக்கு கடலைக் கடக்க வேண்டும். உங்களால அப்படியா? அது முடியுமா?

அவரவர் திறமை, வலிமையை பொறுத்து அவர்களின் சவால்களும் அமைகிறது.

உங்களாலும் முடியும். நம்பிக்கை கொள்ளுங் கள். செயல்படத் தொடங்குங்கள்.

அப்படி செய், இப்படிச் செய் என்று சொன் னால் "வந்துட்டானுக, அறிவுரை சொல்ல" என்று அலுத்துக் கொள்வோம்.

அனுமன் என்ற ஒருவன் இப்படிச் செய்தான் என்று கூறுவதன் மூலம், நீங்களும் முயன்றால் வெற்றி பெறலாம் என்று சொல்லாமல் சொல்கிறது சுந்தரகாண்டம்.

அனுமனின் வழியில் மலை ஒன்று குறிக்கிடுகிறது. அவனைத் தடுத்து, இங்கு இளைப்பாறி விட்டு போ என்கிறது.

ஆனால் அதை கண்டுகொள்ளாமல் முன்னேறுகிறான். வாலில் தீ வைக்கப்படுகிறது. நம்பிக்கையுடன் ஸ்ரீராமனை துதிக்கிறான்.

அது பனிபோல் குளிர்ந்து அவனை தீண்ட வில்லை. அது போல் ஆழமான நம்பிக்கையை உன் செயலில் உனது இஷ்டதெய்வத்தின் மீது வை. அவன் உனது நம்பிக்கையை உண்மை யாக்கி உனது கஷ்டங்களை நிர்மூலமாக்குவான்.

சுருங்க சொல்லி (அதாவது கண்டேன் சீதையை என்பது போல) அதிகமாக பணி செய்தது போல் உனது பேச்சை குறைத்து கடமையை செய் இறைவன் துணை வருவான் என்றும், அவ்வாறு நம்பிக்கையுடன் பயணித்து சீதையை கண்டது போல் நீயும் நம்பிக்கையுடன் உனது கடமையை செய்தால் முடிவில் ஜெயம் கிட்டும் என நமக்கு உணர்த்தவே சுந்தரகாண்டம் படி என்று கூறுகிறார்கள்

அதில் ஹனுமான் பெற்ற கஷ்டத்தில் இலட்சத்தில் ஒரு பங்கு கூட உனது கஷ்டம் இல்லை.

ஒரு வானரமே நம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெற முடியுமானால் உன்னால் ஏன் முடியாது என்ற உண்மையை உனக்கு உணர்த்தி உன்னையும் அதுபோல செயல்படு, கண்டிப்பாக வெற்றி உனக்கு கிடைக்கும் என உணர்த்த சுந்தரகாண்டம் படி என்கிறார்கள் நம் முன்னோர்கள்.

சுந்தரகாண்டம் படிப்பது மட்டும் பலன்தராது.

முயற்சி செய்யுங்கள், ராமன் மீது அனுமன் கொண்ட அதீத நம்பிக்கையைப் போன்று, இறைவன் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்து, செய்யும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் என்பதுதான் சுந்தரகாண்டம் நமக்கு உணர்த்தும் கருத்தாகும்.

முயற்சி திருவினையாக்கும்.



# இந்தியாவை கொள்ளை அடிக்க வந்த அலெக்சான்டர்

# முனிவரின் அடிமையிடம் அடிமையானார்

செழிப்பாக இருந்த இந்தியாவை பல்வேறு காலகட்டத்தில், பல்வேறு கொள்ளையர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

திப்புசுல்தான், அக்பர், ஔரங்கசிப், வெள்ளைக்காரர்கள் என்று இதன் பரிணாமம் விரிந்து கொண்டே சென்றாலும், இவ்வாறு கொள்ளையடிக்கவந்தவர்கள், இங்குள்ள செல்வவளத்தில் கட்டுண்டு, இந்திய மக்களை அடிமைப்படுத்தி, அவர்களை ஆளும் மன்னர்களாகவே இந்தியாவில் தங்கிவிட்டனர்.



(இன்றைய இந்திய வரலாற்றில் கொள்ளையடிக்க வந்த கூட்டத்தினரை எல்லாம் புகழ்ந்து பல்வேறுவகையில் தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகின்றனர்)

இந்த வகையில், மாவீரன் என்று அழைக்கப் படும் அலெக்சாண்டர் கூட இந்திய வளத்தை சுரண்ட வந்தவர்தான்.

அவ்வாறு இந்தியாவை சுரண்டிச் செல்லும்போது, ஒரு நாள் மாலை வீதியில் நகர்வலம் வந்துக் கொண்டிருந்தார்.

அப்போது தன் எதிரே வயதான யோகியை கண்டு குதிரையிலிருந்து இறங்கி அவரை தலை வணங்கினார்.

அந்த யோகியின் கண்கள் சாந்தமும், ஒளியும் நிறைந்து காணப்பட்டது.

உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன், என்னுடன் "மெசடோனியா" வந்துவிடுங்கள்.

உங்கள் வருகையால் என் நாட்டு மக்கள் ஆனந்தம் அடைவார்கள், என் நாடு சுபிற்சம் பெரும்" என்று யோகியை தன் நாட்டிற்கு அழைத்தார் அலேக்சான்டர்.

யோகியோ, "எனக்கு எதுவும் வேண்டா மய்யா, இந்நாடும், நான் வசிக்கும் காடுகளே எனக்கு போதுமான மகிழ்ச்சியை தருகிறது", என அமைதியாக கூறினார்.

தனது வேண்டுகேளை நிராகரித்ததால் கோபம் தலைக் கேரிய அலேக்சான்டர், தன் ஆயுதத்தை யோகியை நோக்கி பேசலானார்,



"மடையனே!! நான் யாரென்று தெரியுமா? நான் தான் மாவீரன் அலேக் சாண்டர். என் ஆனையை மறுத்ததற்கு இப் பொழுதே என்னால் உன்னை கொல்ல முடியும், மரியாதையாக நான் சொல்வதை கேள்" என்றார்.

யோகியோ தைரியமாக, "உங்களால் மாயையான என் உயிரை கொல்ல முடியாது. என் உயிரை போர்த்திய உடலை மட்டுமே கொல்ல முடியும்.

இந்த உடல் என் உயிரை போர்த்திய ஆடை மட்டுமே", என்று அமைதியாக கூறி மீண்டும் தொடர்ந்தார்,

"அரசே உண்மையில் நீங்கள் யாரென்று உங்களுக்கு தெரியுமா?

நீங்கள் என் அடிமையின் அடிமை" என்று சிறிதும் தயங்காமல் புன்னகையுடன் கூறினார்.

"ஏன் அப்படி சொல்கிறாய்", என்று கோபத் துடன் கேட்டார் அலெக்சான்டர்.

"என்னால் என் கோபத்தை கட்டுப் படுத்த முடியும், கோபம் எனது அடிமையாகும், ஆனால் நீங்களோ எளிதாக உங்கள் கோபத்திற்கு ஆளாகி விடுகிறீர்கள், நீங்கள் கோபத்தின் அடிமை, அதனால்தான் உங்களை என் அடிமை யின் அடிமை என்கிறேன்", எனக் கூறினார்.

யோகியின் போதனை அவர் தம் தவறை உணரச் செய்தது. வாயடைத்தவனாய் அங்கிருந்துச் சென்றார் அடிமையின் அடிமையான அலெக்சான்டர்.

# குடும்பத்தில் ஒற்றுமைதரும் பழமுதிர்ச்சோலை

முருகனுக்கு உகந்த அறுபடை வீடுகளில் பழமுதிர்சோலையும் ஒன்றாகும், தனது மாமன் குடிகொண்டுள்ள அழகர் கோயிலுக்கு அருகிலேயே முருகப்பெருமானும் குடிகொண்டுள்ளதால் இத்தலம் குடும்பத்தில் சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் தலமாகவும் விளங்குகிறது.

மேலும் இத்தலத்தில் பல்வேறு சிறப்புகள் உள்ளது. முருகன் சிறுவனாய் வந்து ஔவையாரை சோதித்தது இத்தலத்தில் தான்.

தமிழ்பாட்டி ஔவையார் முருகனிடம் மிகவும் அன்பு கொண்டவர். முருகன் ஔவைக்கு அருள் புரிந்து, இந்த உலகிற்கு பல நீதிகளை உணர்த்த நினைத்தார்.

ஒரு முறை ஔவை கடும் வெயிலில் மிகவும் களைப்புடன் மதுரை நோக்கி சென்று கொண்டிருந்தார். இவரது நிலையறிந்த முருகன் மாட்டுக்கார சிறுவனாக வேடமணிந்து, ஔவை செல்லும் வழியிலிருந்த நாவல் மரக்கிளையில் அமர்ந்து கொண்டார்.

களைப்புடன் வந்த பாட்டி இந்த மரத்தின் கீழ் அமர்ந்து சற்று இளைப்பாறினார். இதனை மரத்தின் மீது அமர்ந்திருந்த சிறுவன் பார்த்து, என்ன பாட்டி! மிகவும் களைப்புடன் இருக்கிறீர்களே? தங்களது களைப்பை போக்க நாவல் பழங்கள் வேண்டுமா? என்றான்.

சந்தோஷப்பட்ட பாட்டி வேண்டும் என்றார். உடனே முருகன், பாட்டி! தங்களுக்கு சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என்றான். இதனைக்கேட்டு திகைப்படைந்த பாட்டி ஏதும் புரியாமல், சுட்ட பழத்தையே கொடேன் என்றார்.

சிறுவன் கிளையை உலுக்கினான். நாவல் பழங்கள் உதிர்ந்தன. கீழே விழுந்ததால் மணல் அதில் ஒட்டிக்கொண்டது. ஔவை அதை எடுத்து மணலை அகற்றுவதற்காக வாயால் ஊதினார். இதை வேடிக்கை பார்த்துகொண்டிருந்த சிறுவன், பாட்டி! பழம் மிகவும் சுடுகின்றதோ?, ஆறியவுடன் சாப்பிடுங்கள் என்று கூறி சிரித்தான்.

உலக உயிர்கள் அனைத்தும் பழங்கள். அவற்றின் மீது பாசபந்தம் என்னும் மண் ஒட்டியிருக்கிறது. அதனைப்போக்க கல்வியறிவு மட்டும் போதாது. இறையருள் என்னும் மெய்யறிவும் வேண்டும் என்பதை உணர்த்த சுட்டிப் பையனாக வந்து திருவிளையாடல் புரிந்தவர் இவர்.

இந்த தலத்தில் 3 அடி உயரத்தில் வேல் உள்ளது. அதற்கு தனி சன்னதி உள்ளது. அதற்கு பால், பன்னீர், தேன் அபிஷேகம் செய்து வேண்டிக் கொள்கின்றனர்.

முன்னர் இந்த வேல் மட்டுமே இங்கு இருந்ததாக வரலாறு. பின்னர் கோவில் அபிவிருத்தி அடைய முருகன்வள்ளி, தெய்வானைக்கு தனி சன்னதி உருவாகியது.

இங்கு வேல் மூலவராக உள்ள முருகப்பெருமான் ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு இருபுறமும் வள்ளி, தெய்வகுஞ்சரி விளங்க நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார்.

குடும்பத்தில் சந்தோஷம் நிலவவும், பொருள் செல்வாக்கு கூடவும் இங்கு வந்து மக்கள் பிரார்த்திக்கின்றனர்.



## முருகன் அமர்ந்த நாவல்மரம்

பழமுதிர்சோலையில் ஔவையாரின் செருக்கை அழிக்க, "சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" என கூறி நாவல் மரத்து பழத்தின் மூலம் ஔவையாருக்கு பாடம் புகட்டினார்.

முருகன் அமர்ந்த நாவல் மரம் இன்றும் பழமுதிர்சோலையில் செழிப்பாக உள்ளது. சாதரணமாக நாவல் மரத்தில் பழங்கள் ஆடி, ஆவணி மாதத்தில் தான் பழுக்குமாம். ஆனால், இத்திருதலத்து நாவல் மரத்தில் மட்டும் பழங்கள் முருகனின் திருவருளால் சஷ்டி மாதமாகிய ஐப்பசியில்தான் பழுக்குமாம் இதற்கு திருமலிருஞ் சோலை குலமலை கொற்றை மலை என்ற பெயர்களும் உண்டு.



## அதிசயம் மிக்க நூபுரக கங்கை தீர்த்தம்

பழமுதிர்சோலை முருகன் கோவிலிலிருந்து சிறிது தூரத்தில் இருக்கு. வேட்டுவர் குலத் தெய்வமான ராக்காயி கோவில் இங்கு நூபுரக கங்கை தீர்த்தம் விழுகிறது. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இதன் உற்பத்தியிடம் எவ்வளவு ஆராய்ச்சிகள் செய்த போதிலும் இன்றுவரை கண்டுப்பிடிக்க முடியவில்லை. திருமாலின் திருச்சிலம்பிலிருந்து உற்பத்தியாகி வருவதாகக் கூறுவர். இச்சுனை மலை உச்சியிலிருந்து வரும்போது சூரிய ஒளியால் பலவிதங்களில் ஒளிரும்.

யானை துதிக்கைப் போல பருமனாக கோமுகியின் வழியாக மாதவி மண்டபத்தில் வந்து விழுகின்றது, இத்தீர்த்தத்தில் இரும்பு சத்தும், தாமிர சத்தும் அதிகம் இருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் சொல்கிறது. நோய்கள் தீர்க்கும் சக்திக் கொண்டதாக இத்தீர்த்தம் விளங்குவதால், இத்தீர்த்தத்தில் நீராடல் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது. இத்தீர்த்தம் தெற்கு நோக்கி பாயும்போது சிலம்பாறு என பெயர் பெறுகிறது.



நூபுரக கங்கை தீர்த்தம்


www.aanmeegamalar.com

# கறிவேப்பிலையும் கனகாம்பரமும்

## ஏற்றுக்கொள்ளாத பெருமாள்...?

மகாமுனிவரும் கோபத்துக்கும் சாபத்துக்கும் பெயர் பெற்றவருமான துர்வாசர், ஒருமுறை வைகுண்டத்துக்குச் சென்றபோது, திருமாலின் திருமார்பில் எட்டி உதைத்துவிட்டார். திருமாலின் திருமார்பில் நித்திய வாசம் செய்யும் திருமகள் கோபித்துக்கொண்டு பூவுலகுக்கு வந்துவிட்டாள். திருமகளை இழந்த திருமால் தனது செல்வங்கள் அனைத்தையும் இழந்துவிட்டார். திருமகளை மீண்டும் அடைய ஸ்ரீநிவாஸமூர்த்தியாக பூமிக்கு வந்தார். வகுளா தேவியின் ஆசிரமத்தில் தங்கியிருக்கும் வேளையில், பத்மாவதி தேவியை ஸ்ரீநிவாஸர் சந்தித்தார். அவளையே மணந்துகொள்ள வேண்டும் என்றும் விரும்பினார்.

ராமாவதாரத்தில் தோன்றி சீதாதேவியின் இன்னல்களையெல்லாம் தாங்கிக்கொண்ட வேதவதியின் தியாகத்தைப் போற்றும் வகையில், கலியுகத்தில் தாம் ஸ்ரீநிவாஸ னாக அவதரிக்கும்போது திருமணம் செய்துகொள்வதாக வாக்குறுதி அளித்தார் ராமபிரான். அந்த வேதவதிதான் ஆகாசராஜனின் மகளாக பத்மாவதி என்ற பெயரில் பிறந்திருந்தாள். தாம் முன்னர் அவளை மணந்துகொள்வதாகக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவே, ஸ்ரீநிவாஸர் பத்மாவதியை மணந்துகொள்ள விரும்பினார்.

மன்னரின் மகளை, தான் மணந்துகொள்ள வேண்டும் என்பதால், திருமணத்தை விமரிசையாகச் செய்ய விரும்பிய ஸ்ரீநிவாஸர், குபேரனிடம் ஒரு கோடியே பதினான்கு லட்சம் பொன் வராகன்களைக் கடனாகப் பெற்றார். தான் பெற்ற கடனுக்குக் கலியுகம் முடியும்வரை வட்டி செலுத்துவதாகவும் வாக்களித்தார்.





குபேரனிடம் பெற்ற நிதியைக் கொண்டு, நாரதரும் வகுளாதேவியும் ஸ்ரீநிவாஸர் பத்மாவதி திருக்கல்யாணத்தை மிகவும் விமர்சையாக நடத்தினர். தேவர்களும், முனிவர்களும், சித்த புருஷர்களும் கலந்துகொண்ட திருமண விழாவில், மாப்பிள்ளை வீட்டார் சார்பாகச் செய்யப்பட்டிருந்த அற்புதமான அலங்காரமும், அருமையான அறுசுவை விருந்தும் எல்லோரும் போற்றும்படி இருந்தன.

ஆனால், திருமணம் என்றாலே ஏதேனும் ஒரு தகராறு வரத்தானே செய்யும்? தெய்வத் திருமணம் என்றால் மட்டும் விதிவிலக்கு கிடைத்துவிடுமா என்ன? எந்தக் குறையுமில்லாமல் ஸ்ரீநிவாஸர் பத்மாவதி திருமணம் நடைபெற்றாலும், கலகம் ஏற்படுத்தும் நாரதர் சும்மாயிருக்கவில்லை.

தன் மகனுக்கு நடத்திய திருமணத்தில் எந்தக் குறையுமே இல்லை என்ற கர்வத்தில் இருந்த வகுளாதேவியாரின் கர்வத்தைப் போக்க நினைத்த நாரதர், பத்மாவதித் தாயாரிடம் சென்று, திருமணத்தில் கறிவேப்பிலையும் கனகாம்பரப் பூவும் சேர்க்கப்படவில்லை என்று தெரிவித்தார். அவ்வளவுதான், திருமணத்துக்குப் பின்னர் இது தொடர்பாகப் பெருமாளுக்கும் பத்மாவதி அன்னைக்கும் ஊடல் உண்டானது.

இந்த ஊடலே பெரிதாகி, பத்மாவதி தாயார் பிரிந்து சென்று திருச்சானூரை அடைந்து தனிக்கோயிலில் வீற்றிருக்கிறார் என்று கூறப்படுகிறது. இதனால்தான் திருமலை ஆலயத்தில் இன்றும் எந்த விதத்திலும் கனகாம்பர மலரையும், கறிவேப்பிலையையும் சேர்ப்பதில்லை என்கிறார்கள்.

ஒன்றுக்கு இரு தேவியர்களை ஸ்ரீநிவாஸ பெருமாள் கொண்டிருந்தாலும், திருமலையில் மூலவராகத் தனித்தே நின்றிருக்கிறார். இரண்டாவது திருமணம் செய்துகொண்டார் என்ற ஊடலில் திருமகள் கரவீரபுரத்திலும், பெருமாளே தன்னை வந்து பார்க்கட்டும் என்ற ஊடலில் திருச்சானூரில் பத்மாவதியும் தனித்தனியே கோயில் கொண்டிருக்கிறார்கள்.

எல்லாக் காரியங்களுக்கும் தகுந்த காரணங்களைக் கற்பிக்கும் கலியுக வரதன், கண்கண்ட தெய்வம், வெங்கடாசலபதியின் லீலைகள் எவரும் அறிய முடியாதவை. அவர் தேவியர்களைவிட்டுப் பிரிந்திருப்பது நம்மைக் கண்ணும் கருத்துமாகக் காப்பதற்குத்தான் என்று புராணங்களும், ஆன்மிகப் பெரியவர்களும் சொல்லியிருப்பது உண்மைதான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

# மீனாட்சியம்மன் வழிபாட்டு நேரமும் விண்வெளியை குழப்பும் கட்டிடக் கலையும்



மதுரையில் மீனாட்சியின் அரசாட்சியே நடைபெறுகிறது. சொக்கநாதர் இருந்தாலும், மீனாட்சி அம்மனே அங்கு பிரதான தெய்வமாக இருக்கிறாள்.

## தினமும் நடைபெறும் பூஜை நேரம்

இந்த ஆலயத்தில் தினமும் காலை 5 மணிக்கு அம்மன் சன்னிதி வாசலில் சித்தி விநாயகர், முருகனுக்கு பூஜை செய்யப்படும். காலை 5.10 மணிக்கு பள்ளியறையில் உள்ள சுவாமி, அம்மனுக்கு பூஜை செய்தவுடன், காலை 5.15 மணிக்கு மூலஸ்தானத்தில் தீபாராதனை காட்டி, திரை விலக்கப்படும்.

காலை 5.30 மணிக்கு பள்ளியறையில் இருந்து சுவாமி, தனது சன்னிதிக்கு புறப்படுவார். அதன் பிறகு காலை 5.45 மணிக்கு பூஜைகள் செய்து திரை விலக்கப்படும். பின்னர் பரிவார தெய்வங்களுக்கு பூஜை நடைபெறும். காலை 6.30 மணிக்கு அம்மன் சன்னிதியில் அபிஷேகத்திற்காக திரை போடப்படும். காலை 6.45 மணிக்கு திரை விலக்கப்பட்டு, தீபாராதனை நடக்கும். மீண்டும் திரை போடப்பட்டு காலச்சந்தி பூஜை நடத்தப்படும். பின் காலை 7.15 மணிக்கு திரை விலக்கப்பட்டவுடன், காலை 10.30 மணி வரை அம்மனை தரிசிக்கலாம். சுவாமி சன்னிதியிலும் இதே முறை பின்பற்றப்படுகிறது.

மீண்டும் காலை 10.30 மணிக்கு திரை போடப்பட்டு அபிஷேகம் நடத்தப்படும். காலை 10.45 மணிக்கு திரை விலக்கப்பட்டு, தீபாராதனை காட்டி, மீண்டும் திரை போடப்படும். காலை 11.15 மணிக்கு திரை விலக்கப்பட்டவுடன் அலங்கார கோலத்தில் மதியம் 12.30 மணி வரை அம்மனையும், சுவாமியையும் தரிசிக்கலாம். பின் நடைசாத்தப்படும். பக்தர்களின் வசதிக்காக, மாலை 3.45 மணிக்கு பூஜை செய்து, 4 மணிக்கு திரை விலக்கப்படும். இரவு 7.30 மணி வரை தரிசனம் செய்யலாம். இரவு 7.30 மணிக்கு அர்த்தசாம பூஜைக்காக திரை போடப்பட்டு, இரவு 8 மணிக்கு விலக்கப்படும். அப்போது அம்மனை வெள்ளை பட்டுபுடவை அல்லது காட்டன் புடவையில் இரவு 9.15 மணி வரை தரிசிக்கலாம். பின், பள்ளியறை பூஜை நடக்கும். விசேஷ நாட்களில் பூஜை நேரம் மாறுதலுக்கு உட்பட்டது.

இவ்வாலயத்தில் அம்மனும், சுவாமியும் மட்டும் சிறப்பு அல்ல, இந்த ஆலயத்தின் கட்டிடக்கலையும் மிகச் சிறப்பு வாய்ந்தது.

## ஆராய்ச்சியாளர்களின் வியப்பு

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை, செயற்கைகோள் மூலம் கண்காணித்த போது, பல அறிவியல் அற்புதங்கள் அங்கு மறைந்திருந்ததை, கண்டறிந்தனர், 'நாசா' விஞ்ஞானிகள்.

வாழ்க்கை ஒரு வட்டம், உலகமும் உருண்டை, கோள்கள் சுற்றுவதும் நீள்வட்டம், இப்படி பிரபஞ்சமே வட்டத்தில் இயங்கும் போது, மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஒன்று மட்டும் தான், சதுர வடிவில் அமைந்துள்ளதை கண்டறிந்தனர்.

கோவில் மட்டுமின்றி, அதை சுற்றியுள்ள தெருக்களும், சதுர வடிவமாக அமைந்துள்ளது, மற்றொரு சிறப்பு. எல்லா பக்கமும் சம அளவு என்பதே சதுரம். அது போல, 'சமூகத்தில் எல்லாரும் சமமே...' என, உணர்த்தும் வண்ணம், உலகிற்கே, இக்கோவில் சான்றாய் விளங்குகிறது.

நீள் வட்டப் பாதையில் சுற்றுகிற, எந்த ஒரு செயற்கைகோளும், சதுர வடிவில் அமைந்திருக்கும் மீனாட்சி அம்மன் கோவிலை முழுவதுமாக படம் பிடிக்க இயலாது. ஏதாவது இரண்டு பக்கமே படம் தெரியும்.

கடந்த, 1984ல், ஜெர்மனியைச் சேர்ந்த, மைக்கேல் கெப்ளர் என்ற விஞ்ஞானி,

இதற்காக, சதுர வடிவில் ஒரு சிறிய செயற்கை கோள் செய்து, விண்வெளிக்கு அனுப்பினார்.

அது எடுத்த படத்தில், மீனாட்சி அம்மன் கோவில், வட்ட வடிவில் இருந்தது. உடனடியாக, மதுரைக்கே வந்தார், கெப்ளர். மீனாட்சி அம்மன் கோவிலை, 68 நாட்கள் ஆராய்ச்சி செய்தார். அப்போது தான், விஞ் ஞானத்தின் பல முடிச்சுகள் அவிழ்ந்தன.

சதுரமான கோவில், வட்ட வடிவமாக தெரிய, கோவிலின் மொட்டை கோபுரம் தான் காரணம் என்பதை கண்டறிந்தார். அதாவது, செயற்கைகோள், 'சிக்னல்'களை கிரகிக்கும் மற்ற கோபுரங்கள், அதை மொட்டை கோபுரத்திற்கு அனுப்பும். அந்த மொட்டை கோபுரம், 'சிக்னல்'களை கிரகித்து, குழப்பி அடித்து, புது, 'சிக்னலை' செயற்கைகோளுக்கு அனுப்புகிறது.

பாண்டிய மன்னர்களின், அறிவியல்பூர்வ மான கட்டுமானத்தை அறிந்து, வியந்தார், கெப்ளர். அதே போல, மொட்டை கோபுரத்தின் மீது, எந்த, 'ரேடாரும்' வேலை செய்யாததையும் கண்டறிந்தார்.

ஆயிரங்கால் மண்டபம், உண்மையில், 965 கால்கள் உடையது என்பதை அறிந்து, வியப்பின் உச்சிக்கே போனார். காரணம், 965 என்பது, விண்வெளியில் தவிர்க்க இயலாத எண்.

விண்வெளி மையங்களை நிலை நிறுத்தும் உயரத்தை, '965 ஸ்டாண்ட்' என, குறிப்பிடுவர். வான அறிவியல் வளர்ச்சி பெற்றிருக்கும் இக்காலத்து விஞ்ஞானம் எல்லாம், அன்றே இருந்ததை அறிந்தார்.

அதே போல, மீனாட்சி அம்மன் கோவிலில், பைரவர் சன்னிதியில் இருந்து, வாணியன் கிணற்று சந்துக்கு செல்லும் கிணற்று சுரங்கத்தில் இருந்த கல்லை, புகைப்படம் எடுத்து, பெரிதுபடுத்தி பார்த்த போது, அலறியே விட்டார். அப்பாறையில் இருந்த வரி வடிவங்கள், அச்சு அசலாக, ராக்கெட்டுகளின், 'சர்க்யூட் பேனல்'களின் வடிவத்தில் இருந்தன.

மேலும், பொற்றாமரைக் குளத்தருகே, இரவில், அமாவாசை பவுர்ணமி இரண்டு நாட்களிலும், ஒரே அளவுள்ள வெளிச்சம் இருப்பதை பார்த்து அதிசயித்தார். அது எப்படி என்று, இன்று வரை, அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மீனாட்சி அம்மன் கோவிலை சுற்ற சுற்ற, அவருக்கு, பல ஆச்சரியங்கள் காத்திருந்தன. சித்தர், தட்சிணாமூர்த்தி மற்றும் முக்குறுணி விநாயகர் சன்னிதிகள் எல்லாம், விண்வெளி வீரர்கள் அமரும், 'சேம்பர்'கள் வடிவில் கட்டப்பட்டிருந்தன. நாயன்மார்கள் மற்றும் 108 லிங்கங்களின் பிரகாரங்கள், விண்கலத்தின் வடிவில் கட்டப்பட்டிருந்ததை கண்டார்.



இறுதியில், தன் ஆராய்ச்சி குறிப்பில், **'உலகின் முதல், 'நாசா' மீனாட்சி அம்மன் கோவிலே... அனேகமாக, பாண்டியர்கள் காலத்தில், சூரிய னுக்கே ராக்கெட் விட்டிருக் கலாம்... அது, இன்னும் பயணித்துக் கொண் டிருக்கலாம்... உலகின் மெய்ஞானம் மட்டுமல்ல, விஞ் ஞானத்திற்கும் அடையாளம் இக்கோவில்...'** என, எழுதி வைத்தார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த, நம் நாட்டு பொக்கிஷங்களின் பெருமையை நாமும் உணர்ந்து, சீரழிக்காமல் இருக்கலாமே!

நன்றி: புஷ்பலதா



இலவச இதழ்
ஆன்மிகமலர்
மெயில் புக்







உங்களது மொபைல் போனில் படிக்க....
GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ–புத்தகம் படிக்கலாம்.

ஆன்மிகமலர்
மெயில் புக்

# ஹிந்து என்ற வார்த்தை வெள்ளைக்காரன் கூட்டியதா?



# Hindu மதத்தை இழிவுபடுத்தும் மாற்று மத முகமூடிகள்

சமீபத்தில் இந்து மதத்தின் மீதான தாக்கம் மிகப்பெரிய அளவில் தூண்டப்பட்டு வருகிறது, இதில் முக்கியமாக தமிழகத்தில் உருவான (பெரும்பாலான சிறு கட்சியின் தலைவர்கள் மாற்று மதத்தைச் சேர்ந்தவர்கள், பெயரில் மட்டும் இந்து மற்றபடி மதம் மாறிய நரிக் கூட்டம்) சிறு கட்சி தலைவர்கள், பட வாய்ப்பு இல்லாமல் கரை ஒதுங்கி நின்று சாப்பாட்டிற்கு வழி தேடியலையும் இயக்குநனர்கள், நடிகர்கள், போன்றவர்கள் காசுக்காக இந்து மதத்தை பழித்து கூறுவது பெருகிவருகிறது.

நேற்று வரை ஓட்டான்டியாக தெருவில் வலம் வந்த இந்த கூட்டம் எவ்வளவுக்கதிகமாக இந்து மதத்தைப்பற்றி இழிவாக பேசுகிறதோ... அந்த அளவிற்கு சொகுசான வாழ்க்கை வாழ வழி கிடைப்பதால், வாய் புளித்ததோ.. காய் புளித்ததோ என்று, எதுவும் தெரியாமல் ஏதாவது ஒரு குழப்பத்தை இந்து மதத்தில் உருவாக்கும் நோக்கில் செயல்பட்டு வருகின்றனர்.

உண்மையில் இவர்களின் கல்வியறிவு பூஜ்யமாகத்தான் இருக்கும், ஆனால் மேதாவித்தனமாக பேசுவதைப் போன்ற நினைப்பில் இந்துமதத்தைப் பற்றி பேசி மாற்று மதத்தினரை குஷிப்படுத்துவது மட்டுமே இவர்களின் பணியாகும்.

மதம் மாறிய வைரமுத்து, ரஞ்சித், சீமான், டேனியல் காந்தி, கௌதமன், இந்த வகையில் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.

இந்த மூடர் கூட்டத்தின் சமீபத்திய டாக் "இந்து என்ற பெயரை வெள்ளைக்காரன் வந்த பின்புதான் சூட்டப்பட்டது என்பதை பிரதானமாக கூறுகின்றனர்.



இதுபோன்ற அறிவு கெட்ட வாதத்தை பெரும்பாலான இந்து மக்கள் காது கொடுத்து கேட்பதில்லை, இருந்தாலும் இதுபோன்ற சில்லரைத்தனமான வாதத் திற்கு முற்றுபுள்ளி வைக்குமளவு இந்து மதம் என்பது மிகப் பழமையான பெயர் என்பதை விவரிக்கிறது பல்வேறு புராண இதிகாசங்கள் உள்ளன.

அந்த வகையில்,

ப்ருஹஸ்பதி சாஸ்திரம், பவிஷ்ய புராணம், காலிகா புராணம், கல்பத்ரும, மாதவ திக் விஜயம், பாரிஜாத நாடகம், சப்த கோஷங்கள் ஆகியவற்றில் ஹிந்து என்ற சொல் குறிக்கப்பட்டிருப்பதோடு, இந்து என்ற சொல்லிற்கு மிக உன்னதமான அர்த்தங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஹிம்ஸயா தூயதே யஸ்ச ஸதாசரண
தத்பர: வேத, கோ, ப்ரதிமா
ஸேகி ஸ ஹிந்து முகவர்ணபாக
(புத்தஸ்ம்ருதி கி.மு.4–ம் நூற்றாண்டு)

பொருள்:

யார் ஹிம்ஸிக்கப் பட்டாலும், எவன் துக்கமடைகிறானோ, ஒழுக்கமான வாழ்க்கை நடத்துவதில் முனைப் புடன் உள்ளானோ, வேதம், பசு, விக்ரஹங்கள் இவற்றை பக்தியுடன் வழிபடுகிறானோ அவனே ஹிந்து.

ஹிமாலயாத் ஸமாரப்ப யாவத் இந்து
ஸரோவரம்
தத்தேவ நிர்மிதம் தேசம்
ஹிந்துஸ்தானம் ப்ரசக்ஷத
(ப்ருஹஸ்பத்ய ஆகமம்
கி.மு. 4–ம் நூற்றாண்டு)

பொருள்:

ஹிமாலயம் முதல் ஹிந்து மஹா ஸாக ரம் வரை விரிந்து பரந்து கிடக்கும் தேவர்களால் நிர்மாணிக்கப்பட்டஇந்த


ஆன்மிகமலர் மெயில் புக்

தேசம் ஹிந்துஸ்தானம் என்று அழைக்கப்படுகிறது.

ஜானுஸ்தானே ஜைன ஸப்த ஸப்த
சிந்துஸ் ததைவ ச;
ஹப்த ஹிந்துர்யாவனிய புனர்ஞேயா
குருண்டிகா:
(பலிஷ்ய புராணம் 4–ம் நூற்றாண்டு)

பொருள்:

'ஸ' என்ற எழுத்து யவனர்களின் (கிரேக்கர் முதலான தேசத்தவர்கள்) பாஷையில் 'ஹ' என்று திரிகிறது. எனவேதான், 'ஸப்த ஸிந்து' என்ற வாக்கியம் 'ஹப்த' ஹிந்து என்பதாக மாறியது.

கலினா பலினா கலிதகலௌ
நூம்தர்மா
யவனையோ ரதரமாக்ராஜதா
ஹிந்தவோ விந்த்ய மாவிஹன!!
(காலிகா புராணம் கி.பி. 5ம் நூற்றாண்டு)

பொருள்:

அதர்ம ஆகிரமிப்பாளர்களின்படையெடுப்புகளினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து ஹிந்துக்கள் தப்பிக்க விந்தியமலையை பயன் படுத்தினர்.

சமஸகிருதம் மட்டுமின்றி, பல்வேறு தமிழ் இதிகாச புராணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த வகையில்,

"இந்து வார்சடை எம்மிறையே"
– திருஞான சம்மந்தர்.

"வந்து மேருவினை நாள்தொறும்
வலம் செய்து உழல்வோர்;
இந்து சூரியனை ஒத்து
இருவரும் பொலியவே"
– கம்பராமாயணம்.

"செக்கர்அத் தீயவன் வாயில்
தீர்ந்து; வேறு
உக்கவான்
தனிஎயிறு ஒத்த இந்து"
– மூவருலா

"பொன்துவரை இந்துமரபில்
இருக்கும்
திருக்குலத்தில்
வந்து மனுக்குலத்தை வாழ்வித்த"
– மூவருலா.

இதுபோன்று தமிழில் எழுதப்பட்ட புராணங்களில் இந்து மதம் பற்றி பல்வேறு தகவல்களை கூறியுள்ளது. நாம் ஒருசிலவற்றை மட்டும் கொடுத்துள்ளோம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த, பழமை வாய்ந்த இந்து மதத்தை ஒருசில நரிக்கூட்டம் திட்டமிட்டே அழிக்க முற்படுகிறது.

அக்காலத்தில் இந்து மதத் தெய்வத்தை அழிக்க அரக்கர்கள்கூட்டம் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் தெய்வ சக்தி அந்த அரக்கர்கள் கூட்டத்தை அடியோடு அழித்து பண்பாடு மிகுந்த இந்து சமய மக்களை காப்பாற்றி வந்துள்ளதையும் புராணங்கள் வாயிலாக படித்திருப்போம்.

அதைப்போன்றுதான் இன்று இந்து மதத்தை அழிக்க அரக்கர்கூட்டங்களாக மாற்று மதத்தினரும், கையேந்திக் கூட்டங்களும் தேவையற்ற கருத்துக்களை, துவேஷ பேச்சுக்களை இந்து மதத்தின் மீது பிரயோகித்து நவீன வகையிலான அரக்க யுத்தம் நடத்தி வருகின்றனர், ஒருபக்கம் இவர்கள் மதம் மாற்றுவது குறித்து பிரசாரமும் செய்து வருகின்றனர்.

**இந்து மதத்தை அழிக்க அரக்கர்கூட்டங்களாக மாற்று மதக் கையேந்திக் கூட்டங்கள் தேவையற்ற கருத்துக்களை, துவேஷ பேச்சுக்களையும் பிரயோகித்து நவீன வகையிலான அரக்க யுத்தம் நடத்தி வருகின்றனர்**




ஆனால் நாட்டைச் சுரண்டிய முகலாயர், கிறிஸ்தவர்கள் போன்றோரின் படையெடுப்புகள், போர்கள், கட்டாய மத மாற்றங்கள் போன்ற கொடுர செயல்களால் அழியாத இந்து மதம் இந்த நவீன வீணர்களின் பேச்சால் அழியாது என்பது ஒவ்வொரு இந்துக்களின் நம்பிக்கை.

இனியாவது இதுபோன்ற மாற்று மதத்தவர்களின் கருத்துக்களை முறியடிக்க இந்து மதத்தைப் பற்றி இந்துக்கள் முழுவதும் அறிந்து கொள்வது நன்று.

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்

www.aanmeegamalar.com

# இருமார்க்கங்கள்: பணி மற்றும் தியானம்



பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: “சுருக்கமாகக் கூறினால் இறை அனுபூதிக்கு இரண்டு அணுகுமுறைகள் உள்ளன. புறவழி மற்றும் அக அல்லது பர வழி. புறவழி என்பது சரியான பணி மூலம் இறைவனை மையமாகக் கொண்ட உணர்வு நிலையுடன் மனித இனத்தை நேசிப்பதும் அதற்குச் சேவை செய்வதுமாகும். மிக ஆழ்ந்த சிறப்புத்தியானமே பரவழி. நீங்கள் எவைகளாக இல்லை என்பதை அறிந்து, நீங்கள் எதுவாக உள்ளீர்கள் என்பதை கண்டுபிடிக்கிறீர்கள். "நான் சுவாசம் அல்ல. நான் உடல் அல்ல. நான் எலும்புகளோ அல்லது சதையோ அல்ல. நான் மனமோ அல்லது உணர்ச்சியோ அல்ல. நான் சுவாசம், உடல், மனம் மற்றும் உணர்ச்சி இவைகளுக்குப் பின் உள்ளது எதுவோ அதுவே நான்.”

நீங்கள் உடலோ அல்லது மனமோ இல்லை என்று அறிந்துகொண்டு, இவ்வுலக உணர்வு நிலைக்கு அப்பால் செல்லும்பொழுது, அதே சமயம் நீங்கள் எப்பொழுதும் உணர்ந்திராத அளவிற்கு உங்கள் உள்ளிருப்பினை அறிந்திருக்கிறீர்கள் என்றால், அந்த தெய்வீக உணர்வுநிலை எதுவோ அதுதான். நீங்கள், இந்த பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் எதில் வேரூன்றப்பட்டுள்ளதோ அதுவே நீங்கள்.

கண்களை நீங்கள் மூடியதும் தோன்றும் இருளிற்குப் பின்னால் ஏன் விசாரனை செய்யக்கூடாது? ஆராய்ந்து பார்க்கவேண்டிய இடம் அதுவே, “அந்த ஒளியே பிரகாசிக்கின்றது;இருளானது அதைபுரிந்துகொள்ளவில்லை, புரிந்துகொள்ளவில்லை, எண்ணற்ற ” ஒளிகளும் பிரபஞ்ச சக்திகளும் அங்கே இயங்குகின்றன.

### வானளாவிய நீடூழிய பேரானந்தம் புலப்படும்

மேலும் அவர் கூறுகிறார்: சமாதி (ஆன்மக்களிப்பு; தியானத்தின் இறுதியான குறிக்கோளான இறைவனுடன் இரண்டறக்கலந்த நிலை) என்பது ஓர் ஆனந்தமயமான அனுபவம். ஓர் அற்புதமான ஒளியினுள் களிப்பு மற்றும் பரந்த பேரானந்தப் படுகையில் எண்ணற்ற உலகங்கள் மிதந்து கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். இந்த அழியும் வாழ்க்கை நிஜமானது என்று உங்களை எண்ணவைக்கும் ஆன்மீக அறியாமையை அகற்றுங்கள். இந்த அழகிய அனுபவங்களை நிரந்தர சமாதியில், இறைவனில் நீங்களே பெறுங்கள். ஒளியின் வண்ண ஜாலங்கள் வானளாவிய நீடூழிய பேரானந்தம் உங்களுக்குப் புலப்படும்.”

“எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் பரம் பொருளின் ஒரு பொறியான அழிவற்ற ஆன்மா இந்த தேகத்தினுள் உள்ளது என்று எல்லா பெரிய மகான்களும் பறைசாற்றுகின்றனர். எவன் தன் ஆன்மாவை அறிகிறானோ, அவன் இந்த உண்மையை அறிகிறான். “நான் முடிவுடைய ஆனந்தத்திற்கும் அப்பாலுள்ளவன்: வெட்டவெளியில் தனது என்றும் புதிய ஆனந்தத்துடன் தனித்துள்ள பரம் பொருளே, இயற்கையெனும் மிகப் பரந்த தேகமாக தன்னை வெளிப்படுத்தி உள்ளது என்பதை இப்பொழுது நான் பார்க்கிறேன். நட்சத்திரங்களும் நானே, அலைகளும் நானே, அனைத்திலுமுள்ள உயிரும் நானே; அனைத்து இயக்கங்களிலுள்ள சிரிப்பும் நானே, மலர்களின் முகங்களிலும், ஒவ்வொரு ஆன்மாவிலும் தோன்றும் புன்னகையும் நானே, எல்லாப் படைப்பையும் தாங்கி நிற்கும் பேரறிவும் மகாசக்தியும் நானே.”

“அதை உணர்ந்துகொள்ளுங்கள்! எனது வார்த்தைகள் உங்களுக்குள் அதிர்ந்துகொண்டேயிருக்கலாம். ஆனால் நீங்கள் தொடர்ந்து மாலையில் துயில்கொண்டேயிருந்தால், அது உங்களுக்கு தெரியாது. நீங்கள் விழித்துக்கொண்டால், நான் கூறியுள்ள உண்மை உங்கள் ஆன்மாவினுள் என்றும் துடித்துக் கொண்டிருப்பதை உணர்வீர்கள். தியானியுங்கள். விடுதலை தரும் இந்தப்பாடத்தை கற்றுக்கொள்ளுங்கள். இனியும் தாமதிக்கவேண்டாம்.

உங்களை உலகக் கொண்டாட்டங்களால் மகிழ்விக்க நான் இங்கு வரவில்லை. மாறாக உங்களுக்குள்ளேயே உறங்கிக்கொண்டிருக்கும் அமரத்தன்மையின் நினைவை எழுப்பவே வந்துள்ளேன். மாயையில் மூழ்கி இருப்பவர்களின் வேதனையை நீங்கள் உணர்வதில்லை. நான் உங்களுக்காகத் துன்பப்படுகிறேன். மேலும் வீடுபேறு உங்களுக்குள்ளே உள்ளது என நீங்கள் உணர நான் எல்லாவிதமான உதவியையும் செய்வேன். உங்களை என்றென்றைக்கு‘மாக விடுவித்துக் கொள்ளுங்கள்.

“அஞ்ஞானம் வழிகாட்டும்போது மனித இச்சாசக்தி நம்மைத் தவறாக வழிநடத்துகிறது. ஆனால் ஞானம் வழிகாட்டும்போது மனித இச்சாசக்தி இறைச் சித்தத்துடன் இணக்கமாகிறது. மனித வாழ்க்கையின் முரண்பாடுகளால் நமக்காக இறைவன் வகுத்த திட்டம் பல சமயங்களில் புலப்படாமல்போய்விடுகிறது. எனவேதான் துயரப்படுகுழியிலிருந்து நம்மைக் காப்பாற்றும் அக வழிகாட்டுதலை நாம் இழந்துவிடுகிறோம்” என்று குருதேவர் அருளியுள்ளார்.

வாழ்க்கையின் சோதனைகளிலிருந்து தப்பிச்செல்வதற்கு ஆவலாக இருந்த ஒரு புதிய சீடரிடம் குருதேவர் கூறினார்: “ உலக ஆசைகள் என்ற உங்களுடைய நோய் குணமாகும் வரை, தெய்வீக வைத்தியன் உங்களை உலகமாயை என்னும் மருத்துவமனையில் வைத்துக்கொண்டிருக்கிறான். பிறகு உங்களைப் பெருவீடு செல்ல அனுமதிப்பான்.”

குருதேவர் கூறுவதில் மிகத்தெளிவான பொருள் அடங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து

61 பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

‘பந்தமும் நிர்பந்தமும்’ என்ற தலைப்பு மூலம் எனது கருத்தினைக்கூற விரும்புகிறேன்.

## பந்தமும் நிர்பந்தமும்

தெய்வீக அன்பு என்னும் இறைவனின் வலைக்குள் செல்வதற்குப் பதிலாக மனிதர்கள் மாயையின் வலையில் சிக்கிக்கொள்கின்றனர். குருதேவரும் அதைத்தான் கூறுகிறார். இறை ஆனந்தத்தில் திளைத்துக்கொள்வதற்குப்பதிலாக கூர்ந்த முட்கள் நிறைந்துள்ள உலக மாயையில் சிக்கி முட்களால் காயமுற்றுத் தவிக்கின்றனர். இறை ஆனந்தம் வேண்டுமென்றால் இறை நினைவுடன் இருக்க வேண்டும். இறைநினைவுடன் இருக்க வேண்டுமென்றால், நமக்கு பாதகம் விளைவிக்கின்ற உலக ஆசைகளை துறக்கவேண்டும். ஆசை எனும் அழுக்கினை களைந்தால்மட்டுமே மனம் தூய்மையடையும். மனத்தூய்மை ஏற்பட்டால் இறைவனுக்கான இடம் அங்கே அமைந்துவிடும். ஒரு பிறப்பில் ஏற்படுகின்ற ஆசை அப்பிறவியில் நிறைவேறாவிட்டால் மறுபிறப்பிலும் அந்த ஆசையானது ஏற்பட்டு அதை நிறை வேற வைக்கலாம். அது பிறவிகள்தோறும் அந்த பந்தம் தொடருகின்றது. இந்த பந்தத்தை, வாழ்க்கையைப்பற்றி அல்லது பிறவியைப்பற்றி உணர்ந்தவர்கள் முறியடித்துவிடுகின்றனர். இல்லையேல் அது வளருகின்றது.

‘பந்தம்’ என்பதற்கு, எனக்குத் தெரிந்த ஓர் உண்மை சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். ஒருவர் ஒரு பெண்ணைக் காதலித்தான்.ஆனால் அவர்கள் இருவரும் இரு ஜாதியைச் சேர்ந்தவர்கள். ஆதலால் இரு வீட்டாரும் அவர்களுக்கு திருமணம் செய்துவைக்க ஒப்புக்கொள்ளவில்லை.

அதனால் இருவர் வீட்டிலும் பிரச்சனை பெருமளவாகிவிட்டது. அகங்காரத்தால் திளைத்துக் கொண்டிருந்த இரு வீட்டாரும் தனித்தனியே ஒரு முடிவிற்கு வந்தனர். அந்தக் காதலர்களை ஒன்று சேரவிடாமல். அவர்களுக்கு, அதாவது பெண்வீட்டார் அவர்கள் ஜாதியைச் சேர்ந்த ஒரு பையனுக்கு தம் மகளையும் மாப்பிள்ளை வீட்டார். அவர்கள் ஜாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை தம் மகனுக்கும் திருமணம் செய்து வைத்தனர். இந்த இடத்தில் இரு வீட்டாரும் இறைவனின் குரலைக் கேட்கவில்லை. அது மட்டுமின்றி, பெண் வீட்டார் பெண்ணின் காதலனுக்கு ஏராளமான தொல்லைகளையும் தந்தனர். பிறகுதான் வேறு ஒருவனுடன் தம் பெண்ணுக்குத் திருமணம் செய்துவைத்தனர்.

காலம் கடந்தது. இருவரும் குழந்தைகளையும் பெற்றனர். சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், அந்தக் காதலியின் கணவனுக்கு ஏதோ ஒரு நோயால் உடல் நிலை பாதிக்கப்பட்டு சென்னையிலுள்ள மருத்துவரை சந்திக்க அவள் தன் கணவனுடன் சென்னை மருத்துவமனைக்கு வந்தாள். அவர்கள் இருவரும் சென்னையில் தங்கி மருத்துவரைப் பார்த்தனர். அவர்கள் (கணவன் மனைவி) தங்கிய வீடு அவளுடைய முன்னாள் காதலன் வீடாக இருந்தது.

இந்த இரகசியம் அவளுடைய கணவருக்கும் அவளுடைய காதலனுடைய மனைவிக்கும் தெரியவில்லை. அதே நேரத்தில் அவளுடைய காதலனின் மனைவி புற்றுநோய் எனும் கொடிய நோயால் பாதிக்கப்பட்டிருந்தாள். அவளும் அதற்கான சிகிச்சை பெற்றுக்கொண்டுதான் இருந்தாள்.

ஆனால் இருவருடைய நோயும் அதிகரித்து வந்தது. ஒருநாள் அந்தக் காதலனுடைய மனைவி இறந்து விட்டாள். அதைத்தொடர்ந்து முன்னரோ பின்னரோ, காதலியின் கணவனும் இறந்துவிட்டான். அதன் பின்னர் காதலர்களாக இருந்த அவர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்துவிட்டனர். குழந்தையும் பெற்றனர். இன்னும் ஒன்றாக வாழுகின்றனர்.



இந்த விஷயம் முழுவதும் எனக்கு காதலனின் சகோதரி மூலம் தெரியவந்தது. “நீங்கள் தவறு செய்து விட்டீர்கள்; அவர்களைப் பிரிக்காமல் திருமணம் செய்து வைத்திருக்க வேண்டும். நீங்கள் அன்றைக்குச் செய்து வைக்காத திருமணத்தை இன்றைக்கு இறைவனே முன்னின்று செய்து வைத்தது போலாகிவிட்டது. நீங்கள் இறைவனிடத்தில் சண்டை போடவில்லையா; மீண்டும் நீங்கள் அவர்களைப் பிரித்துவைக்க முயற்சி செய்யவில்லையா?” என்று நான் அந்த மாப்பிள்ளை (காதலன்)யின் சகோதரியிடம் கேட்டேன். அவர் நான் கூறியதை ஒப்புக்கொண்டார். இன்றைய உலகம் இப்படித்தான் இருக்கிறது.

மேலே கூறப்பட்ட நிகழ்வினை கேள்விப்பட்டபோது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இதில் என்னுடைய கருத்து என்னவெனில் ஆரம்பத்திலேயே அவர்கள் இருவரையும் ஒன்று சேர்ப்பதே இறைவனின் திட்டமாகும். இறைவனையும் அவன் குரலையும் யாருமே ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. அகங்காரம் தலைதூக்கி நின்றதால் இறைவனின் குரல் கேட்காமல் போய்விட்டது. சமுதாயம், அந்தஸ்து இவைகள் முக்கியம் என நினைத்தனர். இதுதான் இன்றைய உலகநியதி. இந்த நிலையில் சமுதாயமும் உறவினரும் எதிராக இருந்தது. இருவருடைய மனம் எவ்வளவு வேதனை அடைந்திருக்கும். அதனால் இறைவன், மேலே கூறிய திட்டத்தைத் தீட்டினான்; மீண்டும் இருவரையும் ஒன்று சேர்த்தான்.

மனித பந்தம் இவ்வாறானவை என்பதற்கு இது ஓர் உதாரணம். மனித வாழ்க்கையும் மனித பந்தமும், தற்காலிகமானவை. உலக வாழ்வில் எதுவும் நீடித்த பந்தமும் இல்லை; நீடித்த பொருளும் இல்லை. நீடித்த பந்தம் என்னவென்றால் அது இறைவனுடனுள்ள பந்தம் ஒன்று மட்டுமேயாகும். எத்தனை முறை பிறந்தாலும் எத்தனை முறை இறந்தாலும் ஒவ்வொரு பிறப்பின்போதும் இறப்பின்போதும், பிறப்பு முதல் இறப்பு வரை அதன் பின்னரும் இறைவன் மட்டும்தான் நம்முடன் இருப்பான்.

அவ்வாறிருக்கையில், எப்பொழுதும் நாம் இறைவனுடன் தான் இருக்கவேண் டும். அவனுடன்தான் பந்தம் வைத்துக்கொள்ளவேண்டுமம. அவன் நமக்கு தாய்க்குத் தாயாகவும் தந்தைக்குத் தந்தையாகவும் நண்பனுக்கு நண்பனாகவும் இருக்கிறான். நம்முடைய ஒவ்வொரு அசைவுகளையும் அவன் கவனித்துக் கொண்டிருக்கிறான்.

நமக்கு என்ன வேண்டும் என்பதை அவன் அறிவான். அதற்கேற்றவாறு அவன் நமக்குத் தேவையானவற்றைத் தருகிறான். நமக்கே தெரியாமல் சிலதெல்லாம் கிடைக்கிறது. அதை அருள்வது அவனேதான். இவ்வாறெல்லாம் அவன் நமக்கு உதவிபுரிந்துகொண்டிருப்பதை நாம் அனைவரும் அறியவேண்டும். யாராலும் தரமுடியாத அன்பைத் தருகிறான்.

ஆனால் அவனைப்பற்றிய எந்த அறிவுமின்றி மனிதன் நடைபோடுகிறான். நமக்காக இவ்வளவும் செய்கின்ற இறைவனுக்கு, நாம் அவன் கேட்காமலே நிபந்தனையற்ற அன்பினைக் கொடுக்க யோசிக்கிறோம்.

சாதாரண மனிதனுக்கு அன்பைத் தரும்பொழுது ஏன் இறைவனை நேசிக்கக்கூடாது? அவனுக்கு நம் அன்பினைத் தரக்கூடாது? இறைவனுக்குத்தான் அன்பினைத் தரவேண்டும். அதுதான் நிர்பந்தமாக உள்ளது.

ஒவ்வொருவரும் அதனுடைய முக்கியத்துவத்தையும் நன்மையையும் புரிந்துகொண்டு வாழ்வதே மனிதத்தன்மையாகும். தியானம்தான் முக்கியம். தியனாத்தால் இறைவனை எவ்வளவுக்கெவ்வளவு நேசிக்க வேண்டும் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

தியானத்திற்கு முக்கியத்துவம் அளித்து ஒருவன் தன்னுடைய உலகியலான கடமைகளைச் சரியாகச்செய்து பலனை எதிர்பாராமல் செய்து பெரும்பகுதியான நேரத்தை தியானத்திற்காக ஒதுக்குவதை வைத்துப்பார்த்தால், இறைவனுக்கு அவன் உண்மையான குழந்தை, இறைவனை நேசிக்கின்ற குழந்தை என்பதை அறிய முடியும்.

தியானத்தை மட்டும் தன்னுடைய முதல் கடமையாக நினைக்க வேண்டும். மற்றவையெல்லாம் இரண்டாவதான கடமைகள்தான். முதல் முக்கியத்துவம், தியானத் திற்குக் கொடுப்பது; இதுதான் ’நிர்பந்தம்.’ இறைவன் மட்டும்தான் நீடித்த பேரன்பனும் பேரானந்தமும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# சுத்தமான இதயம் எப்பொழுதுமே நல்லது

❖ காதலும் காமமும் ஒன்றுக்கொன்று வேறு வேறானது. காதல் தோட்டத்து மலர் என்றால் காமம் ஒரு கண்ணாடிக் கோப்பையிலுள்ள ஒரு சத்துள்ள இரசமாகும். கோப்பையின் சத்து அனுபவத்திற்குரியது. மற்றொன்று அன்பிற்குரியது.



❖ அட்டைகள் உயிருள்ள பிராணி களின் மீது ஒட்டிக்கொண்டு இரத்தத்தை உறிஞ்சி விடுகின்றன. இதுபோல குழந்தைகள் பால் குடிக்கிறார்கள். பாசத் தொடர்பு இப்படித்தான் ஏற்படுகிறது. ஒட்டுண்ணிகள் என்ற காளான்களும் வளர்ந்த வேறொரு மரத்தின் மீது வளர்ந்து அதன் சக்தியால் வாழ்ந்து விடுகின்றன. இதுபோல ஒவ்வொருவராலும் நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்து விடுகிறோம். இப்படியும் ஒரு உலகம் உள்ளது.

❖ எக்கருத்தை எப்படி விளக்கினாலும் குழந்தைப் பருவத்தில் நாம் பிறரை நம்பியே வாழ வேண்டும். இது தவிர்க்க முடியாதது. அதை எப்படிக் குறை சொல்ல முடியும்? ஆனால் சுதந்திரமான தனித் தன்மையில் வாழ்வது மனிதனின் உழைக்கின்ற இயற்கைத் தன்மையாகும். உழைப்பு என்பது இயற்கைத் தன்மை. தாறுமாறான நிலை என்பது கொடுமை. ஜனநாயகம் என்பது உழைப்பு. ஆதிக் கத்தன்மை என்பது உறுதி. அரசத்தன்மை என்பது மக்கள் காட்டும் அன்பு, நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது படிப்பு, தேர்ந்தெடுப்பது என்பது மனிதன் ஊசலாடும் தன்மை.

❖ நமது நாட்டிற்கு ஒரு வரையறுக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை என்பது கிடையவே கிடையாது. இதனால் உலகில் பிற நாடுகள் இந்தியாவைக் காட்டிலும் வேறுபட்டு நிற்கின்றன. நம்மின் இத்தன்மைக்கு காரணம் என்ன தெரியுமா? நமது செயலின்மையும் நம்மை நாமே ஒவ்வொருவரையும் குழப்பிக் குழப்பி குழம்பி மாற்றி அமைக்கின்ற சமுதாயத்தால் அன்றோ இவை ஏற்படுகின்றது?

❖ தினமும் அழுக்கடைந்த ஆடைகளை அழுக்கு நீங்க துவைப்பது ஒரு நல்ல பழக்கமே. இதுபோல சுத்தமான இதயம் எப்பொழுதுமே நல்லது.

❖ மௌனமான பிரார்த் தனை என்பது கிடையவே கிடை யாது. மனம் உவந்து உருக்கத்துடன் பிரார்த்திப்பது எப்பொழுதும் அமைதியை யும் சாந்தத்தையும் தரும். உனது பழக்கமான மனச்சலனங்கள் அனைத்தும் இதன் மூலம் அற்றுப்போகின்றன.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# நாத்திகவாதியை பக்தனாக்கிய திருச்செந்தூர் முருகன்

திருச்செந்தூரில் பிரகாரத்தில் பக்தர் ஒருவர் கந்த சஷ்டி சொல்லிக் கொண்டிருந்தார், அவர் சொல்லி முடித்ததும் “கந்த சஷ்டி பாடி முருகப்பெருமானை வணங்குவது தங்களுக்கு அதீத விருப்பமோ” என நான் கேட்க,

அவர் லேசான புன்னகையுடன் சொன்னார் “ஐயா நான் தீவிரமான நாத்திகவாதியாக இருந்தவன், என்னை போல் எவரும் கடவுளையும், கடவுளை வணங்கு பவரையும் மிகவும் கீழ்தரமாக பேசி இருக்க மாட்டார்கள் அந்தளவுக்கு பேசியவன்”

“30 ஆண்டுகளுக்கு முன் நண்பர்களுடன் திருச் செந்தூர் வந்து அதிகாலையில் நான் மட்டும் கடலும் குளிக்க வந்தேன், அலையின் சுழற்ச்சியில் உள்ளே சென்று விட்டேன், என்னால் கடலில் இருந்து வெளி யேற முடியாமல், என்னையும் மறந்து ‘முருகா’, ‘முருகா’, ‘முருகா’, என்று கத்தினேன், யாரோ எனது தலைமுடியை இறுக்கமாக பிடித்தது போல உணர்ந்தேன், அடுத்த நொடி கரையில் வந்து வீழ்ந்தேன்.

“எழுந்து நின்று பார்த்தேன் கண்ணுக்கு எட்டிய தூரம் எவரும் தென்படவில்லை, கண்களில் கண்ணீர் ததும்ப ததும்ப என்னால் முடிந்தளவுக்கு உரத்த குரலில் ‘முருகா’, ‘முருகா’, ‘முருகா’, என சொல்லிக்கொண்டே முருகப்பெருமான் சன்னதியில் விழுந்து வணங்கினேன்.

“அன்று முதல் நான் கடலில் விழுந்து பிழைத்த நாளையே ‘எனது பிறந்தநாளாக’ கொண்டு, ஒவ் வொரு வருடம் திருச்செந்தூரில் கந்தசஷ்டி பாடி முருகப்பெருமானை வணங்கி மகிழ்கிறேன்” என்ற அந்த பக்தர் சொல்ல, எங்களின் கண்களில் கண்ணீர் பெருக் கெடுத்து ஓட, முருகப்பெருமானை தரிசனம் செய்தோம்.

நன்றி: Ramathayalan





aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர்.காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

அத்திவரதரை தரிசனம் செய்யுங்கள்

குடும்பத்துடன் காஞ்சிபுரம் வாங்க

# 14,600 நாட்கள்

## தண்ணீரில் வாசம் செய்யும் அத்தி வரதர்

# 48 நாட்கள்

## வெளியே வந்து பக்தர்களுக்கு காட்சி





அத்திவரத குடியிருக்கும் குளம் பச்சைப் போர்வையால் போர்த்தப்பட்டுள்ளது

40 வருடம் ஜலவாசம், 48 நாட்கள் பக்தர்களுக்கு காட்சி, பின்பு மீண்டும் ஜலவாசம். இது தொடர்ந்து தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில், நூற்றுக்கால் மண்டபத்தின் வடக்கே இரண்டு குளங்கள் உள்ளன. இதில் தென்திசையில் உள்ள நீராழி மண்டபத்தின் கீழே நீருக்கு அடியில் உள்ள ஒரு மண்டபத்தில் தன்னை மறைத்துக்கொண்டு இருக்கிறார் அத்தி வரத பெருமாள்.

இவர் ஜலவாசம் செய்யும் இந்த குளத்தின் நீர் என்றும் வற்றுவதில்லையாதலால் பெருமாள் யார் கண்ணுக்கும் புலப்பட மாட்டார்.

பெருமாளின் தாருமயமான திருமேனி (மரத்தினால் செய்யப்பட்டது) மிகப்பெரிய அத்தி மரத்தால் வடித்து, பிரம்ம தேவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரம்மனின் யாகத் தீயினின்று தோன்றியதால் சிறிது பின்னப்பட்டுவிட்டார். எனவே அசரீரி மூலம் தன்னை ஆனந்தத் தீர்த்தத்தில் விட்டுவிட்டு பழைய சீவரத்திலிருந்து சிலையை காஞ்சியில் பிரதிஷ்டை செய்யுமாறு கூறினார்.

பெருமாள் பெரும் உஷ்ணத்தைத் தணிக்கவே தெப்பக் குளத்தில் வாசம் செய்கிறாராம்.

அப்படியே இவரை வெள்ளித் தகடு பதித்த பெட்டியில் சயனக் கோலத்தில் வைத்து ஆனந்த புஷ்கரணி மண்டபத்தின் நடுவே நீரில் வைத்து விட்டனர்.

பழைய சீவர பெருமாளை தேவராஜப் பெருமாள் என பிரதிஷ்டை செய்து விட்டனர்.

ஆனந்த தீர்த்தம் என்றும் வற்றாது. எனவே நீரை அருகில் உள்ள மற்றொரு குளத்திற்கு மாற்றி விட்டு ஆதி அத்தி வரதரை வெளியே கொண்டு வருவார்கள்.

வெள்ளி தகடுகள் பதித்த பெட்டியில் சயன கோலமாக, அமிர்தசரஸ் என்னும் அந்த குளத்தில் மூழ்கியிருக்கும் பெருமாள், 40 வருடங்களுக்கு ஒரு முறை, மேலே வந்து, சயன மற்றும் நின்ற கோலமாக எழுந்தருளி இருப்பார்.

வசந்த மண்டபத்தில் 48 நாட்கள் பக்தர்களுக்குசேவை சாதிப்பார்...

நின்ற கோலத்திலும், சயனக் கோலத்திலும் தரிசனம் தந்தபின் மீண்டும் அனந்தத் தீர்த்தத்தில் (குளத்தில்) சயனித்து விடுவார்.

பக்தர்கள் மிகவும் தொன்மையான இந்த அத்தி வரதரை, உற்சவ விழா வழிபாட்டோடு கண் குளிர தரிசிக்கலாம்.

பிறகு மீண்டும் வெள்ளி தகடுகள் பதித்த பெட்டியில் வைத்து குளத்தில் மூழ்கடிக்கப் பட்டுவிடுவார்.

இந்த வைபவம், 1939–ஆம் ஆண்டும், 1979–ஆம் ஆண்டும் நடைபெற்றது. இதில் பல்வேறு



அத்திவரதரை குளத்திலிருந்து வெளியே எடுத்து வரும் பணி



குளத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்ட அத்திவரதர் பூஜை செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சி தர தயாராக உள்ளார்.

ஊர்களிலிருந்து பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளின் அருள் பெற்று திரும்பினர். இந்த வைபவம் 01.07.2019 அன்று காஞ்சியில் மீண்டும் நடைபெறவுள்ளது.

27.06.2019 அன்று அத்திவரதரை குளத்திலிருந்து வெளியே எடுக்கும் பணி துவங்கப்பட்டது, இதற்கு முன்பே குளத்தில் இருந்த தண்ணீர் முழுவதும் அருகில் இருந்த மற்றொரு குளத்திற்கு மாற்றப்பட்டது. பின் 12.00 மணிக்கு அத்தி வரதரை வெளியே எடுக்கும் பணி துவங்கப்பட்டது. 12.10 மணிக்கு இரண்டாவது தொட்டவுடன் குளத்தில் இருந்த சேரும் சகதியும் அகற்றப்பட்டது

2 மணிக்கு ஓரளவு பணி முடியும் தருவாயில் 6 வது படி தாண்டிய சேரும் சகதியும் அகற்றப் பட்டது. அப்போதுதான் எம்பெரு மான் வரதரின் பொற்பாதம் தெரிந்தது! அங்கு பணியில் இருந்த சுமார் 70 நபரும் வரதா, வரதா என கோஷம் எழுப்பி உற்சாகம் அடைந்தனர்.

2.45 மணிக்கு அத்தி வரதரின் முழு வடிவமும் மிக அழகாய் தெரிந்தது வரதரின் முகம்! பார்த்ததும் அனைவரும் புல்லரித்து போயினர்.

3.15 மணிக்கு வரதர் மிகப் பாதுகாப்புடன் வெளியே எடுக்கப்பட்டார்.

கோயில் முழுவதும் CCTV கேமரா உள்ளதால், வரதர் துணி சுத்தப்பட்டு வசந்த மண்டபம் எடுத்து செல்லப்பட்டார் அங்கே 4 மணிக்கு திருமஞ்சணம் செய்யபட்ட பிறதி அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

இந் நிகழ்வில் ஈடுபட்ட பட்டர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன், எங்களது வாழ்நாளில் இது ஒரு மிகப் பெரிய புனிதமான நாள் என்று உணர்ச்சி பெருக்குடன் கூறினர்.

மூன்று நாட்கள் வரதரை புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வந்தது.

01.07.2019 முதல் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி அளிக்கப்படவுள்ளனர். தொடர்ந்து 48 நாட்களுக்கு பக்தர்களுக்கு காட்சியளிக்க உள்ளார். இந்த அற்புத வைபத்தில் அவசியம் பக்தர்கள் கலந்து கொண்டு பெருமாளின் ஆசியை பெறுவோம்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் ஒருமுறை மட்டுமே இந்நிகழ்வினை பார்க்க முடியும், பாக்கியம் இருந்தால் வாழ்வில் 2 முறை பார்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டும். அந்த வகையில் தற்போது உலகெங்கிலும் உள்ள ஒருசிலர் இந்த நிகழ்வை 2வது முறை பார்க்க ஆவலுடன், வயது முதிர்வுடன் காத்திருப்பதாக தெரிவித்தனர்.



# அத்திவரதரை காண வரும் பக்தர்களுக்கு சில அற்புதமான குறிப்புகள்

அத்திவரதர் தரிசனத்துக்குத் தயாராகும் காஞ்சிபுரம் பக்தர்களுக்கு 15 வழிகாட்டுதல்கள்!

40 வருடங்களுக்கு ஒருமுறை காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் 'அத்திவரதர் வைபவம்' வருகிற **ஜூலை 1ம் தேதி முதல் ஆகஸ்ட் 17ம் தேதி வரை** நடைபெற இருக்கிறது. முதல் 24 நாள்கள் சயன நிலையிலும், அடுத்த 24 நாள்கள் நின்ற கோலத்திலும் அத்திவரதர் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். இந்த வைபவத்தில் கலந்துகொண்டு வரதரை தரிசிக்க விரும்பும் பக்தர்களுக்கு சில வழி காட்டுதல்கள்!

❖ முதல்நாள் அன்றே அத்தி வரதரை பார்க்க வேண்டும் என்று திட்டமிட வேண்டாம். வெளியூர் பக்தர்கள் கூட்ட நெரிசலைத் தவிர்க்க, விழா தொடங்கிய சில நாள்கள் கழித்து அத்திவரதரை தரிசிக்க திட்டமிட்டுக்கொள்வது நல்லது.

❖ 48 நாள்களிலும் அத்திவரதர் தரிசனம் மட்டுமே நடைபெறும். வேறு எந்த சிறப்பு பூஜையும் நடை பெறாது.

❖ காலை 6 முதல் 2 மணிவரை, பிற்பகல் 3 முதல் 8 மணிவரை எனத் தரிசனத்துக்கான நேரம் ஒதுக் கப்பட்டுள்ளது.




❖ அத்திவரதர் தரிசனத்தைக் காண வரும் பக்தர்கள் கிழக்கு ராஜகோபுரம் வழியாக அனுமதிக்கப்படுவார்கள். தேசிகர் சந்நிதி வழியாக வசந்த மண்டபத்தை அடைந்ததும் அத்திவரதரை தரிசனம் செய்யலாம்.

தரிசனம் முடிந்த பின்பு மேற்கு ராஜகோபுரம் வழியாக வெளியேற வேண்டும்.

www.aanmeegamalar.com

❖ பொது தரிசனம், சிறப்பு தரிசனம் என இரண்டு வரிசையில் பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள். பொதுதரிசனத்துக்கு எவ்விதக் கட்டணமும் இல்லை. சிறப்பு தரிசனத்துக்கு 50 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். வி.ஐ.பிக்கள் மேற்கு கோபுரம் வழியாக தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவர். வி.ஐ.பி தரிசனத்துக்கு 500 ரூபாய் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

❖ ஸ்ரீதேவராஜர் மற்றும் தாயார் சந்நிதிகளுக்குச் செல்வதற்காக மேற்கு ராஜ கோபுரத்திலிருந்து தனியாக ஒரு வரிசை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தவழியாக மூலவர் மற்றும் தாயாரைத் தடையின்றி தரிசனம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

❖ வெளியூரிலிருந்து வரும் பக்தர்களுக்காக மாவட்ட நிர்வாகம் தரப்பில் சிறப்பு ஏற்பாடுகள் செய்து தரப்பட்டுள்ளன. தற்காலிகப் பேருந்து நிறுத்தம், மருத்துவ முகாம், குடிநீர் வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் பக்தர்களுக்குச் செய்யப்பட்டுள்ளன.

❖ காஞ்சிபுரம் நகரத்தில் தற்காலிகப் பேருந்து நிலையங்களை ஓரிக்கை, ஒலிமுகமதுப் பேட்டை, பச்சையப்பன் கல்லூரி வளாகம் ஆகிய மூன்று இடங்களில் அமைத்திருக்கிறார்கள். மேலும், தனியார் கார் மற்றும் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்காகப் பச்சையப்பன் கல்லூரி (நசரத்பேட்டை), திருவீதிபள்ளம், லாலா தோட்டம் (நகரம்), ஒலிமுகமதுப்பேட்டை ஆகிய பகுதிகளில் வாகன நிறுத்தம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ சென்னை, திருவள்ளூர், திருத்தணி, பூந்தமல்லி, திருப்பதி, பெங்களூரு போன்ற ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகள் ஒலிமுகமதுப்பேட்டை பேருந்து நிலையத்திலிருந்து புறப்படும். உத்தரமேரூர், வந்தவாசி, திண்டிவனம், திருச்சி, புதுச்சேரி மற்றும் செய்யாறு, திருவண்ணாமலை போன்ற ஊர்களுக்குச் செல்லும் பேருந்துகள் ஓரிக்கை பேருந்து நிலையத்திலிருந்தும் தாம்பரம், செங்கல்பட்டு, கல்பாக்கம், மாமல்லபுரம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகள் நத்தப்பேட்டை, வையாவூர் வழியாக மாற்றுவழியில் மத்திய பேருந்து நிலையத்துக்கு வந்து புறப்படும்.

❖ தற்காலிகப் பேருந்து நிலையத்திலிருந்து கோயில் பகுதிக்குச் செல்லும் போக்குவரத்துக்கென நிமிடத்துக்கு 20 அரசுப் பேருந்துகள் பயன்படுத்தப்பட இருக்கின்றன.

❖ தற்காலிகப் பேருந்து மற்றும் வாகனம் நிறுத்தும் இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோயில் உட்புறத்தில் 2 சுத்திகரிப்பு எந்திரங்களும் வெளிப்புறத்தில் 4 சுத்திகரிப்பு எந்திரங்களும் பொருத்தப்பட்டுள்ளன. நகரின் முக்கிய பகுதிகளில் 6 புதிய சுத்திகரிப்பு எந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்க குடிநீர்த் தொட்டி கோயிலுக்குள் ஒன்றும், கோயிலுக்கு வெளிப்புறத்தில் 10 இடங்களிலும் அமைக்கப்படவுள்ளன. மேலும் கழிப்பிட வசதியும் அதிகளவு செய்யப்பட்டுள்ளது.

❖ நகரின் முக்கிய பகுதிகளில் 85 இடங்களில் 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

❖ குற்றம் நடைபெறாமல் தடுக்கும் வகையில் 100 மீட்டருக்கு ஒரு சிசிடிவி கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டக் காவல் கண்காணிப்பு அலுவலகம் மூலமாகக் கண்காணிப்புப் பணிகள் நடைபெறும். சுமார் 2,000க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளார்கள்.

❖ சுகாதாரத் துறையின் மூலமாகக் கோயிலுக்கு உள்பகுதியில் 5 மருத்துவக் குழுக்களும் கோயிலுக்கு வெளியில் 4 மருத்துவக் குழுக்களும் அமைக்கப்பட உள்ளன. முக்கிய பகுதிகளில் 108. ஆம்புலன்ஸுடன் கூடிய தற்காலிக மருத்துவ அறைகள் அமைத்து 24 மணி நேரமும் மருத்துவர்கள் பணியாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ அத்திவரதர் வைபவம் நடைபெறும் நாள்களில் உரிய அனுமதி பெற்றவர்கள் மட்டுமே அன்னதானம் வழங்க முடியும். உணவின் மாதிரி எடுத்துப் பரிசோதனை செய்யப்படும். அதுபோல் காஞ்சிபுரத்தில் உள்ள சுமார் 300 உணவகங்களிலும் உணவுப் பாதுகாப்புத்துறை





அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளார்கள். அந்த உணவகங்களில் இருந்து வரும் உணவுகள் தினமும் பரிசோதனை செய்யப்படும்.

❖ பெரும்பாலான விடுதிகள் முன்பதிவு செய்யப்பட்டுவிட்டன. ஆகவே, வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து வரும் பக்தர்களை திருமண மண்டபங்களில் தங்க வைப்பதற்குத் தொண்டு நிறுவனங்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

❖ இதுதவிர காஞ்சிபுரம் நகரில் ஒலிமுகமது பேட்டை, பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி, ஓரிக்கை ஆகிய 3 இடங்களில் இருந்து அரசு டவுன் பஸ்கள் இயக்கப்படும். கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் இந்த பஸ்களில் ரூ.10 கட்டணத்தில் வரதராஜபெருமாள் கோவில் அருகே வரை செல்லலாம்.

❖ முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு கோவிலில் 6 பேட்டரி கார்கள் மற்றும் 3 சக்கர சைக்கிள்கள் தயார் நிலையில் வைக்கப்படும். அத்திவரதரை பார்க்க வரும் பக்தர்கள் எளிய முறையில் தரிசிக்க மாவட்ட நிர்வாகம் சிறப்பு ஏற்பாடுகள் செய்துள்ளது.

❖ கோவிலில் கோடை உற்சவம், ஆனி கருடசேவை, ஆடிப்பூரம், உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் குறிப்பிட்ட நாட்களில் மட்டும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.

❖ அத்திவரதர் விழாவையொட்டிதமிழ் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து பாதுகாப்புக்காக 2,500 போலீசார் வரவழைக்கப்படுகின்றனர்.

❖ வரதரை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் ஒருவருக்கொருவர் இடையூறு ஏதும் செய்யாமல், உணவுப் பொருட்களையும், குப்பைகளையும் அதற்கென வைக்கப்பட்டுள்ள இடத்தில் போட்டு, பெருமாள் வாழும் காஞ்சிபுரத்தை அசுத்தம் செய்யாமல், எந்தவித சச்சரவும் இன்றி பெருமாளை தரிசித்து செல்ல வேண்டும் என்று ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பாக பக்தர்களுக்கு கோரிக்கையாக வைக்கப்பட்டுள்ளது. அவசியம் அனைவரும் குடும்பத்துடன் பெருமாள் அருளைப் பெற்று திரும்புவோம்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com

# பொன் பொருளை கொள்ளையடித்தவர்கள்

# இந்து மத பண்பாடு, வழிபாட்டு முறையை திருடும் அவலம்

தனக்கென்று எந்த அடையாளமும் இல்லாத மதம்மாறியவர்கள் தற்போது நமது இந்து மத அடையாளத்தை கொள்ளை அடிக்க நினைக்கிறார்கள். கற்பக விளக்கிற்கு பதில் மாதா விளக்கு, தலையில் பரிவட்டம், சிலுவை குத்துவிளக்கு என அனைத்திலும் மக்களை முட்டாள் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் 200 ஆண்டுகளுக்கு பிறகு இந்த புகைப்படத்தினை மேற்கோள்காட்டி இந்தியாவில் வாழ்ந்த மன்னர்கள் அனைவரும் கிறிஸ்து வர்கள். அவர்கள் எங்கள் பழக்க வழக்கத்தை பின்பற்றியவர்கள் என்று வாய்க்கூசாமல் சொல்ல அதிக வாய்ப்பு இருக்கிறது.

மேலும் கடவுளே தேவை இல்லை என்று மதம் மாறி சென்றவர்களுக்கு இந்துக்களின் பழக்க வழக்கம் மட்டும் ஏன் தேவைப்படுகிறது.

மேற்கண்ட அனைத்தையும் சுப்பிரமணிய சுவாமி சமீபத்தில் தெரிவித்த கருத்தாகும்.

இதுகுறித்து இந்து மத சடங்கு, சம்பிரதாயங் களை திருடும் கும்பல்கள் மீது விரைவில் வழக்கு தொடரவும் அவர் முனைப்பாக உள்ளார்.

திரு சுபிரமணிய சுவாமி அவர்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் ஒருநிமிடம் யோசித்துப் பார்த்தால், இதுவரை இந்தியாவின் மீது பொன் பொருளை கொள்ளையடிக்க வந்த மாற்று மதத்தினர், தற்போது இந்துக்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் கொள்ளையடிக்க இதுபோன்ற நூதன வழியை கையாள்வதாகவே தோன்றுகிறது.

தமிழகத்தில் நாகர்கோவில், கன்னியாகுமரி, கேரளாவின் திருவருவனந்தபுரம் ஒட்டியுள்ள பகுதிகளில் கட்டப்படும் சர்ச்கள் போன்றவற்றில் கொடிமரம் வைத்தும், மரத்தில் குழந்தைகள் வேண்டிக் கட்டப்படும் தொட்டிலைப்போன்று தொட்டிலைக் கட்டியும், விளக்கு ஏற்றியும் வழிபாடுகள் நடத்தப்பட்டு வருகிறது.

இவர்களின் மத வழிபாட்டு முறை மிகவும் குறுகியதாக இருப்பதால், இந்து மதத்தின் பண்பாட்டின் மீதும், வழிபாட்டு முறைகளையும் அபகரிக்க வெட்கமில்லாமல் துணிந்துள்ளது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

"குன்றுதோறும் குமரன் இருப்பான்" என்ற வாக்கியத்தை பொய்யாக்கும் விதமாக அனைத்து குன்றுகளையும் இக்கூட்டம் ஆக்கிரமித்து சிலுவையை நட்டு வழிபாடு மேற்கொள்கிறது.

இதற்கு ஒருபடிமேலே சென்று இந்துக்களின் காவி நிறத்தை சுட்டது மட்டுமின்றி, ருத்ராட்சம் போன்றமாலையை கையில் வைத்துக் கொள் ளும் நடைமுறையை கடைபிடிக்கின் றனர்.

இந்துமதத்தைச் சேர்ந்த பல்வேறு குழுவினர் இதுபோன்ற பண்பாடு, வழிபாட்டுமுறைகளை திருடும் கும்பல் மீது வழக்கு தொடுத்து, அவர்களை அவசி யம் தடுத்து நிறுத்த வேண்டும்.





இன்னும் 200 ஆண்டுகளுக்கு பிறகு இந்த புகைப்படத்தினை மேற்கோள்காட்டி இந்தியாவில் வாழ்ந்த மன்னர்கள் அனைவரும் கிறிஸ்துவர்கள், அவர்கள் எங்கள் பழக்க வழக்கத்தை பின்பற்றியவர்கள் என்று வாய்க்கூசாமல் பொய் சொல்ல அதிக வாய்ப்பு இருக்கிறது












# கர்மாவும் கொடுக்கல்–வாங்கல் கணக்கு வழக்கும்

ஆன்மீக நிலை: இறைவனோடு இரண்டற கலந்தவரின் ஆன்மீக நிலை 100% என்று வைத்துக் கொண்டால் இன்றைய கலியுகத்தில் சராசரி மனிதனின் ஆன்மீக நிலை 20% தான். உலக மக்கட்தொகையில் 90%, 35% ஆன்மீக நிலைக்கு கீழ்ப்பட்டவரே. மகான் என்று ஒப்புக் கொள்வதற்கு வேண்டிய குறைந்தபட்ச ஆன்மீக நிலை 70% ஆகும்.

நம் வாழ்வில் நிகழும் பல நிகழ்வுகள், பிறப்பு முதல் எந்த குடும்பத்தில் பிறக்கிறோம் என்பது வரை ஏற்கனவே விதிக்கப்பட்டவை. ஒருவன் தன் விதியை எதிர்கொள்வதற்கு உகந்த சூழ்நிலையும், குடும்பத்தார் ஒவ்வொருவருடனும் தீர்க்க வேண்டிய கொடுக்கல்வாங்கல் கணக்கும் உடைய ஒரு குடும்பத்தில் பிறக்கிறான்.

கர்மவிதியின்படி ஒவ்வொரு நேர்மறையான செயலும் ஒரு ‘புண்ணிய பலனையும்’ ஒவ்வொரு எதிர்மறையான செயலும் ஒரு ‘பாவ பலனையும்’ உருவாக்குகிறது. பின்னர், தான் செய்த செயல்களுக்கு ஏற்றவாறு ஒருவன் பலனை அடைகிறான். நாம் எப்பொழுதெல்லாம் இன்னொருவருக்கு ஒரு நல்ல காரியத்தை செய்கிறோமோ அவர் கூறும் நன்றியைத் தவிர்த்து அதற்கு நிகரான நல்ல பலன் நமக்கு கிடைக்கிறது. அதேபோல் நாம் எப்பொழுதெல்லாம் கெடுதல் செய்கிறோமோ அப்பொழுதெல்லாம் எதிர்மறையான விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. இதை வெறும் ‘மன்னிப்பு’ கோரி சரி செய்ய இயலாது.

கர்மவிதி என்பது என்றும் பொய்க்காது. இது நியூட்டனின் மூன்றாவது விதியைப் போன்றது. ஒவ்வொரு செயலுக்கும் அதற்கு நிகரான எதிர் மறை விளைவு கட்டாயம் உண்டு.

நம் வாழ்க்கை முழுவதும் நம்முடைய பழைய கணக்கான புண்ணியபாவ பலனை சரி செய்கிறோம் அல்லது புதியதாக ஆரம் பிக்கிறோம். இந்த பிறப்பில் தீர்க்க முடியாத கணக்கை அடுத்த பிறவிக்கு எடுத்து செல்கிறோம். முற்பிறவிகளின் கொடுக்கல் வாங்கல் கணக்கைப் பற்றி நாம் உணருவதில்லை.

மேலும், உறவுமுறையும் பாலினமும் அடுத் தடுத்த பிறவியில் மாறலாம். ஒருவருக்கு ஒரு பிறவியில் தந்தையாக இருந்தவர் அடுத்த பிறவியில் அவருக்கே மகளாக பிறக்கலாம்.

எப்படி கணக்குகள் ஏற்பட்டு விதிப்படி தீர்க் கப்படுகிறது என்பதை அருகில் உள்ள படத்தில் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்கள் மூலமாக தெரிந்து கொள்ளலாம். அத்துடன் ஆன்மீக பயிற்சி எவ்வாறு விதியின் விளைவுகளை மாற்ற வல்லது என்பதையும் புரிந்து கொள்ளலாம் .

ஆன்மீக விஞ்ஞானப்படி பெரும்பான்மையான குடும்ப அங்கத்தினருடன் நமக்கு சாதக மான அல்லது பாதகமான கணக்குகள் முற்பிறவியிலிருந்து தொடர்கிறது. இதன் காரணம் நம்முடன் கர்மபந்தப்பட்டவர்களுக்கு அருகாமையில் இருக்கும்போதுதான் கர்ம பலனான மகிழ்ச்சி அல்லது துக்கத்தை நாம் உணர முடியும்.

நமக்குள் ஆன்மீக விழிப்புணர்வு அல்லது ஆன்மீக நாட்டம் இல்லாவிட்டாலும் நாம் உலக விஷயங்களில் மூழ்கி இருந்தாலும் கர்ம விதிப்படி ஆன்மீகம் எந்த அளவிற்கு உதவுகிறது என்பதை இதிலிருந்து உணர முடிகிறது. உலக உறவுகள் நன்மையாக அமையவும் விதியிலிருந்து நாம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

மேலும் விவரங்களுக்கு

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

## கணக்கு ஏற்படுதல் : ஆரம்ப நிகழ்வு




‘அ’ என்பவன் ‘ஆ’ என்பவனிடமிருந்து பெரிய தொகையை வாங்கி அதை திரும்ப செலுத்துவதற்கு முன்பே இறந்து விடுகிறான்.

ஆனால் கர்ம விதிப்படி இக்கணக்கு தீர்க்கப்பட வேண்டி உள்ளது.

### அடுத்த பிறவியில் கணக்கை தீர்க்கும் முறை

**நிகழ்வு ஒன்று : ‘அ’ – விடம் பணம் உள்ளது**

இப்பொழுது ‘அ’ – விடம் பணம் இருப்பதால் ‘ஆ’ – விற்கு பரிசு கொடுக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டு (‘ஆ’ என்பவர் இப்பிறவியில் அவரின் தம்பி மகனாக இருக்கலாம்) அந்த பணம் திருப்பப்படுகிறது.

**அல்லது**

எந்த காரணமும் இல்லாமல் ‘அ’ என்பவன், அதே தொகைக்கு ‘ஆ’ என்பவனால் ஏமாற்றப்படலாம்.

**நிகழ்வு இரண்டு : ‘அ’ – விடம் இந்த பிறவியிலும் பணம் இல்லை**

இப்பிறவியிலும் ‘அ’ – விடம் பணம் இல்லாமல் அவனுடைய பொருளாதார நிலை மோசமாக இருந்தால் என்ன செய்வது. ‘ஆ’ என்பவன் இப்பிறவியில் ‘அ’ – வை சந்திக்கும்போது பணத்தை திரும்பவும் வசூலிக்க வேண்டும் என்ற ஞாபகம் இல்லாவிட்டாலும் ஆழ்மனதில் அந்த கொடுக்கல்-வாங்கல் கணக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால் ‘ஆ’ – விற்கு ‘அ’ – வை பார்க்கும்போது இனம் புரியாத பகை உணர்வு ஏற்படும். இப்படிப்பட்ட நம்பிக்கையற்ற தருணத்தில் ‘அ’ – வால் என்ன செய்ய முடியும்?

**தீர்வு**

இந்த நிலையிலிருந்து விடுபட ‘அ’ – விற்கான ஒரே தீர்வு ஆன்மீக தத்துவப்படி முறையான ஆன்மீக பயிற்சி செய்ய ஆரம்பிப்பது. நாமஜபம் போன்ற ஆன்மீக பயிற்சி செய்வதால் கிடைக்கும் சக்தி கொடுக்கல்-வாங்கல் கணக்கை சரி செய்ய உதவுகிறது. அதே சமயம், ‘ஆ’ – விற்கு லாட்டரியினாலோ பதவி உயர்வாலோ அல்லது சம்பளம் கூடுவதாலோ அந்த தொகை சரியாக்கப்படுகிறது.

○ ஆன்மிகம் ○ தத்துவம் ○ உடல்நலம் ○ பலன்கள்
புத்தம் புதிய ஆன்மிக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள், மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்